
லக்ஸ
டாய்லட் சோப்பினல்
அழகுபடுத்தும்
சுலபமானமுறையை
ராஜகுமாரி
சொல்கிருர்
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையை தாராளமாக சருமத்தின் மேல் தடவுகிறேன்...
சுத்தமான, குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறேன்..
பின்பு, உலர்ந்த மிருதுவான துண்டினல் முகத்தை துடைக்கிறேன்
LUX
TOILET SOAP
☆ சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப் ☆
மேனியை அழகுபடுத்திக் கொள்வ திலே தேர்ச்சிபெற்ற எல்லா சினிமா நட்சத்திரங்களும், மென்மலரின் இதழ் போல் மிருதுவானதும் களங்க மின்றி பளபளப்பானதுமான சருமம் ஏற்பட லக்ஸையே நம்ப லாம் என்றறிவார்கள். அதன் சுக மளிக்கும் வீர்யம் வாய்ந்த நுரை சருமத்திற்குள் புகுந்து தீங்கைவிளை விக்கும் மாசு மறுக்களை சுலபமாக சுத்தம் செய்து விடுகிறது. ராஜ குமாரியின் அழகு முறையை நீங்க ளும் 30 நாட்கள் கையாளுங்கள்— பிறகு அதன் சுகமாக சுத்தம் செய் யும் தன்மையை கண்டு மகிழ்வீர்கள்.
LTS. 136-23-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED


எல்லா வலிகளுக்கும்
ஸாரிடோன்
பத்தே நிமிஷத்தில் குணமளிக்கிறது

கல்கி

பொருளடக்கம்

லர் 6 | 1946 செப்டம்பர் 15 | வியய
ிதழ் 7 | | ஆவணி 30

“கல்கி”யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

தியாகம் என்னும் அருங் குணமும் ஒழுக்கம் என்னும் பெருங் குணமும் தேசபக்தி ன்னும் சிறந்த குணமும் வெகு நாளாக ஒரு மனித உருவத்தைப் பெறவேண்டும் என்று தவம் செய்தன. அவற்றின் தவம் முடிவில் நிறைவேறியது. மேற்படி மூன்று அரும்பெரும் குணங் ளும் சேர்ந்து மதுரை ஸ்ரீ ஏ. வைத்திநாதய்யர் என்னும் உருவத்தைப் பெற்றன.

அபாரமான சட்ட ஞானமும் சிறந்த வாக்குவன்மையும் அபூர்வமான வாதத்திறனும் டைத்துள்ள ஸ்ரீ ஏ. வைத்திநாதய்யர் வக்கீல் தொழிலில் பெயரும் பிரபலமும் அடைந்தவர்; தற்கிணையான வருமானமும் உள்ளவர். அவரைப்போல் வக்கீல் தொழிலில் பணம் ம்பாதிப்பவர்களும் அவரைவிட அதிகமாகச் சம்பாதிப்பவர்களும் கூடத் தமிழ் நாட்டில் ன்னும் சிலர் இருக்கிறார்கள். ஆனால் வக்கீல் தொழிலில் சம்பாதிக்கும் வருமானத்தை அவரைப் போல் தேசசேவைக்கும் தேசத் தொண்டர்களின் உதவிக்கும் செலவு செய்கிறவர்கள் மிழ் நாட்டில் வேறு யாரும் இல்லை.

1923-ம் ஆண்டிலிருந்து ஸ்ரீ ஏ. வைத்திநாதய்யர் தேசிய இயக்கத்தின் முன்னணியில்



நின்று ஒவ்வொரு போராட்டத்திலும் தியாகத் தீயில் குதித்திருக்கிறார். எல்லா சமயங்களிலும் தியாகியா யிருப்பதோடு அவர் ஆகஸ்டு தியாகியுங்கூடத்தான். 1942—ஆகஸ்டில் காந்திஜி சிறைப்பட்ட செய்தி வந்ததும் 'சடக்'கென்று சட்டத்தை மீறிப் பொதுக் கூட்டத்தில் பேசிச் சிறை புகுந்தார்; பிறகு பாதுகாப்புக் கைதியாக இரண்டு வருஷம் இருந்தார்.

சிறைவாசம் செய்யாத காலத்திலெல்லாம் ஸ்ரீ ஏ. வைத்திநாதய்யர் நிர்மாணத் தொண்டில் கவனம் செலுத்துகிறார். தமிழ்நாடு ஹரிஜன சேவா சங்கத்தின் தலைவரா யிருந்து ஹரிஜன சமூகத்துக்கு அரிய தொண்டுகள் செய்து வருகிறார். அவருடைய பெரு முயற்சியினால் மதுரை மீனாக்ஷி அம்மன் ஆலயம் சகல ஹிந்துக்களுக்கும் திறந்துவிடப்பட்ட நிகழ்ச்சி மிகவும் பிரசித்தமானது; சரித்திரத்தில் இடம் பெறக்கூடியது.

பட்டம் பதவிகளை வேண்டாத தமிழ்நாட்டுத் தேசபக்தர்களில் ஸ்ரீ ஏ. வைத்திநாதய்யர் முதன்மையானவர். காங்கிரஸ் ஸ்தாபனங்களிலேகூட அவர் ஸ்தானங்களை விரும்புவதில்லை. அவரை இம்முறை சென்னைச் சட்டசபைக்கு நிற்கும்படி செய்வது பிரம்மப் பிரயத்தனமா யிருந்தது. கடைசியில் ஸ்ரீ வல்லபாய் படேலின் கண்டிப்பான உத்தரவு தான் அவரைச் சட்ட சபையில் கொண்டு போய்ச் சேர்த்தது.

சென்னைச் சட்ட சபையில் தற்சமயம் பொதுஜன நன்மைக்கான விஷயங்களை உபயோக ான முறையில் வற்புறுத்திப் பேசி வருகிறவர்களில் ஸ்ரீ ஏ. வைத்திநாதய்யர் முன்னணியில் இருக்கிறார். சட்ட சபைக்குள்ளே அவர் ஸ்ரீ சத்தியமூர்த்தியாகவும் சட்ட சபைக்கு வெளியே ாஜாஜியாகவும் விளங்குகிறார் என்று சொல்வது மிகையாகாது.



NPB







KARSODRINE
INHALER

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 7

என்ன சேதி?

இந்தியா மந்திரி

பிரிட்டிஷ் மந்திரி சபையில் விரைவில் சில மாறுதல்கள் ஏற்படக் கூடும் என்று பத்திரிகை நிருபர்கள் சூசகமாகத் தெரியப்படுத்தி வருகிறார்கள்.

அவர்களில் சிலர், லார்ட் பெதிக் லாரென்ஸுக்குப் பதிலாக பிரிட்டிஷ் கடற்படை மந்திரி ஏ. வி. அலெக்ஸாண்டர் இந்தியா மந்திரியாவாரென்று சொல்லுகிறார்கள். வேறு சிலர் ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ்தான் இந்தியா மந்திரியாக வருவார், — அவருக்குத்தான் இந்திய விவகாரங்களில் ரொம்ப அனுபவம் என்று சொல்லுகிறார்கள்.

இந்த ஜோஸ்யங்களையெல்லாம் கேட்கும்போது நமக்கு ஒரு விதத்தில் ஆச்சரியம் உண்டாகிறது. இந்தியாவுக்காக என்று இங்கிலாந்தில் ஒரு மந்திரி இன்னமும் வேண்டுமா? அது ஒழிவதற்கு நாளாகவில்லையா? புதுடில்லியில் தேசத்தின் நன்மதிப்புக்குப் பாத்திரமான பதினொரு மந்திரிகள் 'ஜாம் ஜா'மென்று தேசத்தின் நிர்வாகத்தை நடத்திக் கொண்டு வரும்போது, பெதிக் லாரென்ஸ் எதற்கு? அலெக்ஸாண்டர் எதற்கு? ஸ்டாபோர்ட் கிரிப்ஸ்தான் எதற்கு?

கூடிய சீக்கிரத்தில் பிரிட்டிஷ் மந்திரி சபையில் இந்தியா மந்திரி என்னும் பதவியே இல்லாமல் போகும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த நல்ல நாள் வரும் வரையில் லார்ட் பெதிக் லாரன்ஸே இந்தியா மந்திரியாயிருந்து வருவதில் நமக்கு ஆட்சேபம் இல்லை. உலகத்து இராஜ தந்திரிகளுக்குள்ளே சொன்ன வார்த்தையைச் சொன்னபடியே நிறைவேற்றி வைத்த தீரர் அந்த மாபெருங் கிழ மந்திரியே யல்லவா?

திருப்திக்கு இடம்

சர்க்கார் அல்திவார உத்தியோகஸ்தர்களும் கிராம உத்தியோகஸ்தர்களும் செய்த தீவிரக் கிளர்ச்சிக்கு ஓரளவு பலன் கிடைத்திருக்கிறது. சென்னை சர்க்கார் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தியே விடுவதென்று தீர்மானித்து விட்டனர். அதன் விளைவாக, நாற்பது ரூபாயும் அதற்குக் குறைவாகவும் சம்பளம் வாங்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு இனிமேல் மாதம் **மூன்று ரூபாயும்**, நாற்பது ரூபாய்க்கு மேலும் 100 ரூபாயோ அல்லது அதற்குக் குறைவாகவோ சம்பளம் வாங்குபவர்களுக்கு மாதம் **ரூபாய் நான்கும்** சம்பள உயர்வு கொடுத்திருக்கிறார்கள். அதோடு கிராம உத்தியோகஸ்தர்களையும் அல்திவார உத்தியோகஸ்தர்களாகவே பாவித்து அவர்களுக்கும் மாதம் மூன்று ரூபாய் சம்பளம் உயர்வு செய்திருக்கிறார்கள்.

பாதகம் இல்லை! வாத்தியார்களுக்கு இரண்டு ரூபாய் சம்பள உயர்வு கொடுத்த சென்னை மந்திரிகள், சர்க்கார் நிர்வாகத்தை நடத்திக் கொடுக்கும் உத்தியோகஸ்தர்களுக்காவது மாதம் மூன்று ரூபாய் சம்பள உயர்வு கொடுக்க முன் வந்தது பெரிய காரியந்தான்! இதிலிருந்து பள்ளிக்கூட வாத்தியார்களைவிட அல்திவார உத்தியோகஸ்தர்களை அவர்கள் ஒரு ரூபாய் அளவுக்கு அதிகமாக மதிக்கிறார்கள் என்று தெரிகிறது!

அகவிலை ஒன்றுக்கு நாலு மடங்கு உயர்ந்திருக்கும் இந்தக் காலத்தில் மூன்று ரூபாயும் நாலு ரூபாயும் சம்பள உயர்வு செய்வது கேலிக் கூத்து என்றே தோன்றக்கூடும். ஆனாலும் இதில் ரூபாய்க்குக் காலணா அளவு திருப்தி அடையவும் இடம் இருக்கிறது. முதலாவது, உத்தியோகஸ்தர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையின் நியாயத்தை இதன் மூலம் பிரகாசம் சர்க்கார் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இரண்டாவது, இது இடைக்காலத் தாற்காலிக உயர்வு தான் என்றும், நிரந்தரச் சம்பள உயர்வைப் பற்றி மந்திரி சபைக் கமிட்டி

யோசித்து வருகிறதென்றும் தெரியப்படுத்தி யிருக்கிறார்கள். இந்த இரண்டும் திருப்திகரமான அம்சங்கள்.

ரத்து செய்யவும்

அஸ்திவார உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தை ஓரளவு உயர்த்திய சர்க்கார் அதே மூச்சில் இன்னொரு காரியத்தையும் செய்திருக்கிறார்கள். மேற்படி உத்தியோகஸ்தர் சங்கத்துக்குச் சர்க்கார் கொடுத்து வந்த அங்கீகாரத்தைப் பிடுங்கிக்கொண்டு விட்டார்கள். இது என்ன நியாயம் என்று தெரியவில்லை.

சம்பளத்தை உயர்த்த முன் வந்ததிலிருந்து மேற்படி உத்தியோகஸ்தர்களுடைய கோரிக்கையின் நியாயத்தைச் சர்க்கார் ஒப்புக் கொண்டதாக ஆகிறது. அவர்களுடைய கோரிக்கையின் நியாயத்தை ஒப்புக்கொண்ட பிறகு அவர்களுடைய சங்கத்துக்கு அங்கீகாரத்தை மறுப்பதற்கு அர்த்தம் என்ன?

இத்தகைய அர்த்தமற்ற காரியம் சில சமயம் அனர்த்தத்தில் கொண்டு போய் விட்டு விடக் கூடும். ஏதோ நமது கோரிக்கையின் நியாயத்தையாவது ஒப்புக் கொண்டார்களே என்று உத்தியோகஸ்தர்கள் அடையக்கூடிய ரூபாய்க்குக் காலணா திருப்தியையும் மேற்படி உத்தரவு இல்லாமல் செய்து விடக்கூடும். எனவே, சங்கத்தின் அங்கீகார ரத்து உத்தரவைச் சர்க்கார் உடனே ரத்து செய்ய வேண்டும்.

நமஸ்காரம், மிஸ்டர்!

பிரிட்டன் ஒரு மாதிரியான ஏகாதிபத்தியம்; அமெரிக்கா இன்னொரு மாதிரி ஏகாதிபத்தியம். பிரிட்டன் ஆயுத பல
தின் மூலம் அரசியல் ஆதிக்கத்தை
ஏற்றுக் கொண்டு பொருளாதாரத்தை
சுரண்டி வந்தது. அமெரிக்காவோ
போக்கிவுத்தைக் கொண்டு வந்
நமக்கு முன்னாலே திறந்து காட்
நமக்கு வேண்டிய மட்டும் கடன்கொடு
த்துத் தன்னுடைய ஆதிக்யத்தை நி
நாட்டிக் கொள்ளுவது வழக்கம். இன்
சீனா முதலிய பல நாடுகள் தலைதூக்
முடியாமல் விருப்பதற்குக் காரணம் மே
படி பொருளாதார ஆதிக்கமே யாகும்.

இதெல்லாம் நமக்கு நன்றாகத் தெ
யும். ஆனால், நமக்குத் தெரியும் எ
பது அமெரிக்காவுக்குத் தெரியுமோ
என்னவோ? தெரியாது என்றே நினை
கிறோம். தெரிந்திருந்தால், அமெரிக்க
பொருளாதார இலாகாவைச் சேர்ந்
வெல்ட்மோர் வில்காக்ஸ் என்பவர் அந்
மாதிரியாகப் பேசி யிருக்க மாட்டார்.

மேற்படி வில்காக்ஸ் என்ன சொல்
கிறார் என்றால், இந்தியா சுதந்தி
மடையப் போவதைப் பார்த்து அமெ
ரிக்கா ரொம்ப சந்தோஷப்படுகிறதாம்
சுதந்திர இந்தியாவுக்கு உதவி செய்
அதன் நன்மதிப்பைப் பெற்று
கொள்ள அமெரிக்கா ஆவலாக இரு
கிறதாம்; அதற்காக, அமெரிக்க
இந்தியாவுக்கு நிறையக் கடன் கொடுத்
உதவி செய்ய வேண்டுமாம்!

நமஸ்காரம்! மிஸ்டர் வில்காக்ஸ்
அநேக நமஸ்காரம்! நூற்றைம்ப
வருஷ காலம் பிரிட்டிஷாரின் அரசிய
ஆதிக்கத்தின் கீழ் இந்த தேசம் இரு
தது போதாதா? இனி அமெரிக்க
வின் பொருளாதார ஆதிக்கத்தின்
கீழ் வேறு இருக்கவேண்டுமா?

தூண்டுவது யார்?



பிரதம மந்திரி பிரகாசம் சட்டசபையில் அஸ்திவார உத்தியோகஸ்தர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையைப் பற்றிப் பேசும்போது, "அவர்களை இம்மாதிரி கிளர்ச்சி செய்யும்படி யாரோ தூண்டி விட்டிருக்கிறார்கள்!" என்றார். உண்மையில் அவர்களைத் தூண்டிவிட்டிருப்பது பஞ்சமும் பட்டினியுமேயாகும்.

கொசுவைக் கொல்ல அணுகுண்டு!

மனிதர்களுக்கும் சரி, தேசங்களுக்கும் சரி, இயக்கங்களுக்கும் சரி, போதாத காலம் எங்கிருந்தோ எப்படியோ சில சமயம் வந்து விடுகிறது.

பொது உடைமை இலட்சியம் மகத்தான இலட்சியம்; பொது உடைமைக் கொள்கை நல்லசிறந்த கொள்கை. எனினும், அத்தகைய பொது உடைமை இலட்சியத்துக்கு இப்போது போதாத காலம் வந்திருப்பதாகத் தோன்றுகிறது.

பொது உடைமை இலட்சியத்தைப் பெரும்பாலும் காரியாம்சத்தில் ஏற்றுக்கொண்டு நடத்தி வரும் தேசம் ருஷியா தேசம். அதன் மூலம் உலகத்துக்கே ஒரு புதிய வழியை ருஷியா காட்டியிருக்கிறது; மனித வர்க்கத்துக்கு மகத்தான நன்மையைச் செய்திருக்கிறது.

ஆயினும் ஜூலைப் ஜின்ஹ அவர்கள், "இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் யுத்தம் நேர்ந்தால் என்னுடைய மேலான ஆதரவை ருஷியாவுக்கு அளிக்கும்படியிருக்கும்" என்று பட்டவர்த்தனமாகச் சொல்லும்போது, ருஷியாவிடம் நமக்கு அனுதாபம் உண்டாகிறது. பொது உடைமைக் கொள்கைக்கு ஏதோ போதாத காலந்தான் என்னும் எண்ணமும் உண்டாகிறது.

அது ஒருபுறமிருக்க, தமிழ்நாட்டில் பொதுஉடைமைக் கட்சித் தலைவர்களின் தவறான காரியத்தால் அந்த இயக்கத்துக்கு நேர்ந்திருக்கும் நஷ்டத்தை நினைக்கும்போது நமக்கு அளவில்லாத வருத்தம் ஏற்படுகிறது. "அடடா! இப்படிப்பட்ட தவறைச் செய்து பொதுஉடைமை இயக்கத்துக்கு இத்தகைய தீங்கைச் செய்துவிட்டார்களே!" என்று எண்ணி எண்ணி வருத்தப்பட நேரிடுகிறது.

"இப்படிப் பட்ட தவறு" என்று நாம் சொல்லும்போது, தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளரின் வேலை நிறுத்தத்தைத்தான் குறிப்பிடுகிறோம்.

தொழிலாளிகள் தங்களுடைய உரிமைகளுக்காகவோ சம்பள உயர்வுக்காகவோ நடத்தும் போராட்டங்களில் எல்லாம் பெரும்பாலும் பொது மக்களின் அனுதாபம் தொழிலாளர் பக்கந்தான் இருப்பது வழக்கம்.

ஆனால் இந்தத் தடவை ரயில்வேத் தொழிலாளர் செய்திருக்கும் வேலை நிறுத்தத்துக்குப் பொது மக்களின் ஆதரவு போதிய அளவு இல்லை. அப்படி இருந்திருக்குமானால் திருச்சியில் சென்ற வாரத்தில் நடந்திருக்கும் போலீஸ் பயங்கரங்கள் நாடெங்கும் மகத்தான எழுச்சியை உண்டு பண்ணியிருக்கும். துப்பாக்கிப் பிரயோகத்தில் சிலர் மாண்டதும், பலர் காயம் பட்டதும், இன்னும் பலர் தடியடிக்கு உள்ளானதும், பெண்மணிகள் பலர் ஹிம்சிக்கப் பட்டதும், ரயில்வேத் தொழிலாளர் பிரதிநிதியான ஸ்ரீ நம்பியார் எம்.எல்.ஏ. மண்டையைப் புடைக்கப் பட்டு உயிருக்கே ஆபத்தான நிலைமையை யடைந்ததும்,—இவையெல்லாம் சாதாரண சம்பவங்கள் அல்ல.

வேலை நிறுத்தம் பொது ஜனங்களின் பூரண ஆதரவைப் பெற்றிருந்தால், மேலே கூறிய பயங்கர சம்பவங்கள் நாட்டில் ஒரு பெரும் புரட்சியையே உண்டு பண்ணியிருக்கும். மேற்படி சம்பவங்களுக்குக் காரணமான அதிகாரிகள் இதற்குள் சீட்டுக் கொடுக்கப்பட்டிருப்பார்கள். சென்னை மந்திரி சபையே கிடுகிடுத்துப் போயிருக்கும் என்று சொல்வது மிகையாகாது.

அதற்கு மாறாக மேற்படி திருச்சி பயங்கர சம்பவங்கள் நாட்டில் எத்தகைய கலக்கத்தையும் உண்டு பண்ணவில்லை. கிணற்றிலே கல்லைப் போட்டதுபோல் எல்லாம் கம்மென்று இருக்கிறது. பிரகாசம் சர்க்கார் கொஞ்சம் கூட அசைந்து கொடுக்கவில்லை. சகல காரியங்களும் வெகு சாவதானமாக நடந்து வருகின்றன.

இப்படிப்பட்ட துரதிர்ஷ்ட நிலைமை எப்படி ஏற்பட்டது என்றால்: (1) வேலை நிறுத்தத்துக்குப் போதிய பலமான காரணம் இல்லாமையாலும், (2) வேலை நிறுத்தம் ஆரம்பித்த சமயம் கொஞ்சங்கூடப் பொருந்த மற்ற சமயமா யிருப்பதாலுந்தான்.

* * *

வேலை நிறுத்தத்துக்குக் காரணம் என்னவென்று பார்ப்போம்.

ஏற்கெனவே ரயில்வேத் தொழிலாளரின் சம்பள உயர்வு கோரிப் பெருங் கிளர்ச்சி நடந்ததும், அகில இந்தியாவிலும் ரயில்வே ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுக்கப் பட்டதும், கடைசியில் ரயில்வே போர்டார் வெகு தூரம் இறங்கி வந்து சமரசம் ஏற்பட்டதும் நேயர்கள் அறிந்தவை.

அந்தக் கிளர்ச்சியின்போது முதன்மையாக நின்ற தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளர் சிலரை மேலதிகாரிகள் ஏதோ காரணத்தைச் சொல்லி வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள்.

"தக்க விசாரணை செய்யாமல் யாரையும் அதிகாரிகள் யதேச்சாதிகாரமாக வேலையிலிருந்து நீக்கக் கூடாது" என்று ஏற்கெனவே ஒரு விதி அமுலில் இருந்தது. நீக்கப் பட்டவர்களுக்கு அப்பீல் உரிமையும் இருந்தது.

மேற்படி விதிகளை தென்னிந்திய ரயில்வே ஜெனரல் மானேஜர் மிஸ்டர் ரெயினல்ட்ஸ் ரத்து செய்து விட்டார்.

தொழிலாளரைக் காரணம் சொல்லாமல் வேலையிலிருந்து தள்ளியது அநியாயம்.

விசாரணை உரிமையையும் அப்பீல் உரிமையையும் ரத்துசெய்தது அதைக் காட்டிலும் பெரிய அநியாயம்.

எனவே, ரயில்வேத் தொழிலாளருக்கு நியாயமான குறை ஏற்பட்டிருந்தது என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் மேற்படி குறையானது, பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கும், ரயில் போக்குவரத்து நின்று போவதற்கும், எத்தனையோ முக்கியமான காரியங்கள் தடைப்படுவதற்கும், லட்சக்கணக்கான ஜனங்கள் பிரயாண வசதியின்றித் தவிப்பதற்கும் போதுமான காரணமா என்பது கேள்வி.

மேற்படி கேள்விக்கு "இல்லை" என்றுதான் நாம் பதில் சொல்லித் தீரவேண்டியதாயிருக்கிறது.

குறையை நிவர்த்திப்பதற்கு மற்ற வழிகளையெல்லாம் கையாண்டு பார்த்து விடவில்லை.

அகில இந்திய வேலை நிறுத்தத்துக்குப் பூர்வாங்கமாகச் செய்தது போல் போதுமான பொதுஜனக் கிளர்ச்சி நடத்தவில்லை.

அகில இந்திய ரயில்வேத் தொழிலாளர் பெடரேஷனில் மேற்படி விஷயத்தைக் கொண்டுவந்து பரிகாரம் தேடவில்லை.

மத்திய சர்க்காரையும் ரயில்வே போர்டையும் தலையிட்டு நியாயம் வழங்கும்படி வற்புறுத்தவில்லை.

இது ஏதோ ரயில்வேத் தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் தென்னிந்திய ரயில்வே ஜெனரல் மானேஜருக்கும் நடக்கும் தகராறு என்றே இருதரப்பிலும் கருதப்பட்டிருக்கிறது.

ஜெனரல் மானேஜர் மிஸ்டர் ரெயினல்ட்ஸ் வீம்பு பிடித்ததிலும், தொழிலாளரின் உரிமையைப் பறித்ததிலும், பொது மக்களின் நன்மையைச் சிறிதும் கருதாமல் தமது அதிகாரத்தை நிலைநாட்டுவதிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்ததிலும் ஆச்சரியம் ஒன்றும் கிடையாது.

எப்படியாவது வேலை நிறுத்தத்தைத் தூண்டிவிட்டு அதை உடைத்துத் தமது வீம்பை நிறைவேற்றிக் கொள்ள அவர் எண்ணியிருந்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால் அவர் விரித்த வலையில் தொழிலாளர் தலைவர்கள் விழுந்து விட்டதுதான் பரம ஆச்சரியமான விஷயமாகும்.

மிஸ்டர் ரெயினல்ட்ஸ் இந்த தேசத்தார் அல்ல. இந்த நாட்டு மக்களின் சுகதுக்கங்களைப் பற்றி அவருக்குக் கவலையில்லை. எவ்வளவு முக்கியமான காரியங்கள் தடைப் பட்டுப் போனாலும் அவருக்கு என்ன வந்தது?

ஆனால் தொழிலாளர் தலைவர்களிடம் அத்தகைய மனோபாவம் இருக்கக் கூடாது. இந்த நாட்டு மக்களின் சுக துக்கங்களுக்கு அவர்கள் பாத்தியப் பட்டவர்கள். லட்சக்கணக்கான ஜனங்களுக்குப் பிரயாண வசதியில்லாமற் போய் அவர்களுடைய காரியங்கள் தடைப்பட்டுப் போவதைத் தொழிலாளர் தலைவர்கள் அலட்சியமாகக் கருதி யிருக்கக்கூடாது.

பதின்மூன்று தொழிலாளிகளுக்கு வேலை போனது வருந்தத்தக்க விஷயந்தான்; அநீதிதான். ஆனால் அந்த

அநீதியை நிவர்த்தித்துக் கொள்ள வேறு வழிகள் உண்டு.

போன வேலை திரும்ப வரும்; தக்கபடி கிளர்ச்சி செய்தால் சில நாள் தாமதித்தாவது கட்டாயம் திரும்ப வரும்.

ஆனால் ரயில் நின்று போவதால் லட்சக்கணக்கான ஜனங்களின் காரியங்கள் எவ்வளவோ வீணாய்ப் போய் விடும்; எவ்வளவோ பொருள் நஷ்டமும் மனக் கஷ்டமும் ஏற்பட்டுவிடும். மரணத் தறுவாயிலுள்ள தாயைப் பார்க்க மகன் போக முடியாது. நோயில் விழுந்த மனைவியைப் புருஷன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக முடியாது. குறிப்பிட்ட தேதிகளில் நடக்கும் கலியாணத்துக்கு மாப்பிள்ளை போக முடியாது.

இவையெல்லாம் சாமானிய விஷயங்கள் அல்ல. பின்னால் சரிக்கட்ட முடியாத நஷ்டங்கள்; ஆறுதல் ஏற்பட முடியாத கஷ்டங்கள்.

எழும்பூர் ஸ்டேஷன் வாசலில் மறுநாள் காலையில் கிளம்பும் ரயிலுக்காக முதல் நாள் மாலையிலிருந்து ஆயிரக்கணக்கான ஜனங்கள் காத்துக் கிடந்த காட்சியையும், டிக்கட் கிடைக்காமல் திரும்பியவர்களின் துயரம் ததும்பும் முகங்களையும் பார்த்தவர்களுக்கு ரயில் வேலை நிறுத்தம் பொது ஜனங்களுக்கு எவ்வளவு கஷ்டத்தை உண்டாக்குவது என்பது தெரியவரும்.

பதின்மூன்று பேருக்கு வேலை போனதையும், ரயில் வேலை நிறுத்தத்தினால் லட்சக்கணக்கான ஜனங்கள் அடையும் கஷ்டத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வேலை போன விஷயம் அற்பமானதென்றே ஏற்படும். அதற்காக இவ்வளவு மகத்தான வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தது நியாயம் என்று சாதிக்க முடியாது. கொசுவைக் கொல்வதற்கு அணுகுண்டை உபயோகித்தது மாதிரிதான் ஆகும்.

* * *

வேலை நிறுத்தம் தொடங்கப்பட்ட சமயமோ கொஞ்சமும் பொருத்தமற்ற அசந்தர்ப்பமான சமயமாகும்.

வேலை நிறுத்தம் ஆரம்பமான சமயத்தில், இந்தியாவின் மத்திய சர்க்கார் தேசிய சர்க்காராக மாறப்போகிற விஷயம் நிச்சயமாகிவிட்டது.

நாற்பது கோடி மக்களின் உள்ளத்தைக் கவர்ந்த அரும் பெரும் தலைவர் பண்டித ஜவாஹர்லால் மத்திய தேசிய சர்க்காரை அமைக்கும்படி வைஸ்ராயினால் அழைக்கப்பட்டிருந்தார்.

ரயில்வேக்களின் நிர்வாகம் மத்திய சர்க்காரின் பொறுப்பு என்பதே எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

எனவே, வேலை நிறுத்தத்துக்கு எவ்வளவு நியாயமான பலமான காரணம் இருந்தபோதிலும் தேசிய சர்க்கார் ஏற்படும் வரையில் தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளர் தலைவர்கள் பொறுத்திருந்திருக்க வேண்டும்.

தொழிலாளர் நன்மையைப் பரமுக்கியமாகக் கருதும் பண்டித ஜவாஹர்லால்ஜி நிச்சயம் தங்களுக்கு நியாயம் செய்வார் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட நிலைமையில் தொழிலாளரையும் சரி, பொதுமக்களையும் சரி, தொழிலாளர் தலைவர்கள் இவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாக்கியிருக்கக்கூடாது. அவ்விதம் யோசனையின்றிச் செய்த காரியத்தால் பொது ஜனங்களிடம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த செல்வாக்கையும் ஆதரவையும் பெரிதும் இழந்து விட்டார்கள்.

பல வருஷ காலமாகச் சேர்த்து வைத்த சொத்தை ஒரே நாளில் குதிரைப் பந்தய மைதானத்தில் கொண்டு போய்த் தொலைத்து விடுவது போன்ற செய்கை அது.

இந்தியா தேசத்திலேயே ரயில்வேத் தொழிலாளரின் கட்டுப்பாடு பிரசித்தி பெற்றிருந்தது. அதிலும் தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளர் மிக நல்ல பெயர் வாங்கியிருந்தார்கள்.

இந்த அவசர வேலை நிறுத்தத்தினால் பல வருஷமாகச் சேர்ந்திருந்த செல்வம் ஒரேயடியில் போய்விட்டது.

ரயில்வேத் தொழிலாளரின் கட்டுப்பாடும் குலைந்து விட்டது.

வேலை நிறுத்தத்துக்குப் போதிய காரணம் இல்லாததாலும், பொது ஜன ஆதரவு இல்லாமையாலும் பல தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பி விட்டார்கள். இன்னும் பலர் வேலைக்குத் திரும்ப விரும்புகிறார்கள்.

இதைப் பார்க்கும்போது வேலை நிறுத்தக்காரர்களுக்குக் கோபம் பொங்கி வருகிறது. 'கருங்காலிகளை'த் தடுத்து நிறுத்தப் பார்க்கிறார்கள்.

இதிலிருந்து பலாத்காரம் உண்டாகிறது. தொழிலாளர் பலாத்காரமும்

போலீஸாரின் பலாத்காரமும் ஒன்றையொன்று வளர்க்கின்றன.

ஆக முடிவில், தொழிலாளர்களின் துன்பம் அதிகமாகிறது. பொது ஜனங்களின் அவதியும் வளர்கிறது.

வேறு காரணம் எல்லாம் ஒருபுறமிருக்க, இந்தியா தேசத்தில் முதன் முதலாக நமது அரும் பெரும் தலைவர்கள் அமைத்திருக்கும் தேசிய சர்க்காருக்கு மரியாதை செய்யும் பொருட்டாவது வேலை நிறுத்தத்தை முடிவு செய்யும்படி தொழிலாளர் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

அதன் மூலம் தேசத் தலைவர்களிடம் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது என்பதைக் காட்டும்படி கோருகிறோம்.

தொழிலாளர் தலைவர்கள் என்ன செய்தாலும் செய்யாவிட்டாலும் தேசிய சர்க்கார் தங்களுடைய கடமையைச் செய்வார்கள் என்பதில் நமக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

கட்டாயம் அவர்கள் நடுக்கண்ட நியாயம் வழங்குவார்கள். அவர்கள் அளிக்கும் தீர்ப்பு ஒருக்கால் தொழிலாளர் கட்சிக்கு அதிக சாதகமாக ஏற்படலாமே தவிர, ஒரு நாளும் அதிகாரிகளின் விருப்புக்கு ஆதரவாயிராது என்பது நிச்சயம்.


எனவே, இந்த வேலை நிறுத்தமும் இதனால் விளையும் துன்பங்களும் முற்றிலும் அநாவசியமானவை.

அவசியமில்லாமல் தொழிலாளருக்கும் பொது ஜனங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களைக் குறித்துப் பெரிதும் வருந்துகிறோம்.

அவற்றினால் பொது உடைமை இலட்சியத்துக்கே பாதகம் ஏற்படுகிறது என்பதை நினைக்கும்போது நமது வருத்தம் பன்மடங்கு ஆகிறது.

வேலை நிறுத்தம் முடிய வேண்டியது அவசியம்; தொழிலாளரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்; இவற்றைப் போலவே அவசியமான மூன்றாவது காரியம் பொன் மலையில் நடந்திருக்கும் துப்பாக்கிப் பிரயோகம், தடியடி முதலிய போலீஸ் செயல்களைக் குறித்துத் தக்க விசாரணை நடத்துவதாகும். மேற்கூறிய பயங்கர முறைகளுக்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்று தெரிய வேண்டும். காங்கிரஸின் பெயரால் நடக்கும் மாகாண ஆட்சியில் பழைய அதிகார வர்க்க ஆட்சியில் நடந்தது போன்ற மேற்படி கொடுமைகள் நடப்பதைப் பொது மக்கள் ஒரு நாளும் விரும்பமாட்டார்கள். அந்தப் பலாத்கார முறைகளுக்குப் போதிய காரணம் இருந்ததா என்று தெரிந்து கொள்ள விரும்புவார்கள். சென்னை சர்க்கார் காங்கிரஸின் நற்பெயரைக் காக்கும் பொருட்டு அத்தகைய பகிரங்க விசாரணை நடத்த உடனே ஏற்பாடு செய்ய வேண்டும்.

ரயில் நிற்காது!



தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளரிடம் பொதுஜனங்கள் அனுதாபம் கொண்டிருந்தபோதிலும் வேலை நிறுத்தத்தை ஆதரிக்கவில்லை. வேலை நிறுத்தத்தை உடனே நிறுத்த வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

வான சஞ்சாரம்

இசைத்தேனீ

"பண்டைக்காலக் குருகுல முறையில் பல வருஷங்களாய்ப் பயின்ற சங்கீதந்தான் உருப்படும். இக்காலத்திய காலேஜ்களில் எவ்வளவு பயிற்சி கொடுத்தாலும் அவ்வளவு உருப்படாது" என்று சிலர் சித்தாந்தம் செய்வதுண்டு. கால மாறுதலில் அத்தகைய குருகுலச் சௌகரியங்களெல்லாம் இப்போது அமைவதற்கில்லை. சிறந்த வித்வான்களை ஆசிரியர்களாகக் கொண்டு ஆரம்பமான ராஜா ஸர் அண்ணாமலை சங்கீத காலேஜில் நாலு வருஷம் பயின்று வெளிவந்த சில பாடகர்கள், மேற்படி குறைக்கு இடம் கொடாது உயர்ந்த கலையுடன் சிறந்து விளங்குகிறார்கள். சிறு வயதில் கோட்டைநல்லூர் சுப்பையா பாகவதரின் சிஷ்யராயிருந்து, பிறகு மேற்படி காலேஜில் சங்கீதக் களஞ்சியமான வித்வான் சபேசய்யரிடம் சங்கீதம் பயின்று நல்ல தேர்ச்சியுடன் வெளிவந்த முதல் மாணவ கோஷ்டியில் ஒருவர் சங்கீத பூஷணம் டி. கே. ரங்காசாரியார். கலையுலகில் நாளுக்குநாள் புகழ்பெற்று அதை அலங்கரிக்கும் இயல்புடையவர் என்பது அவரது செப்டம்பர் 9ல் திருச்சி நிலையக் கச்சேரியிலிருந்து தெரியவந்திருக்கும். சாரமான உருப்படி கொண்ட சாரீர நயமும், ஞானச் சிறப்பும், பாவப்பொலிவுடன் பல உயரிய லக்ஷணப் பொருத்தங்களும் சேர்ந்து இசை விருந்தாயிருந்தது. தோடி ஆலாபனை வின்யாஸமாயும் உறவுகளைப் பெருக்குடன் அழகு வடிவமாயும் இழைந்து வந்தது. 'தாஸமேமன்' உருப்படியின் சங்கதிகளின் வனப்பு கவனத்தைக் கவர்ந்தது.

8ல் திருச்சியில் மருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யர், சென்னையில் வி. சேதுராமய்யர் இவர்களின் வயலின் கச்சேரிகள் உயர்ந்த ரகமாயிருந்தன. அதோடு, கால மாறுதல்களுக் கேற்ற, பாணி வித்யாசங்களையும் எடுத்துக் காட்டின. முதல்வர் அடக்கமான சம்பிரதாய முறையில் வாத்யத்தைக் கையாளும் பழம் பெரும் வினிய வித்வான். பல்லவி ராகமாம் கீரவாணியும், கானடா, கன்னட, ராகமாலிகை இவைகளும் கலப்பில்லாத பழைய முறைக்குச் சான்றாயிருந்தன. இரண்டாமவரோ, இக்காலத்திய விறுவிறுப்புடன் கல கலக்க வைக்கும்படி வாசிக்கும் இளம் வித்வான். பக்க வாத்தியம் வாசிக்கும்போது பாடகரின் பாட்டுப் பெரிதா அவர் பக்கவாத்யந்தான் பெரிதா என்று சந்தேகிக்கும்படி விளாசி அடித்துவிடுவார். அவரது அன்றையத் தனிக் கச்சேரியில் காம்போதி ஆலாபனையிலும், தானத்திலும், சுத்தபங்காளாவிலும் நல்ல கைவரிசைகளைக் காட்டினார்.

செப்டம்பர் 3ல் திருச்சியிலிருந்து கேட்ட எம். எம். மாரியப்பாவின் கானம் அபூர்வ வனப்புடன் ஒரு பிரத்யேக ரகத்தைச் சேர்ந்த தெனலாம். மதுரமான குரலில், பாவப் பொலிவையே பிரதானமாய்க் கொண்டு, கேட்போர் உள்ளத்தை உருக வைத்து விடுகிறார். ஷண்முகப்ரியா ராகத்திலும் உருப்படியிலும் சில சஞ்சார சங்கதிகள் தனியழகுடன் விளங்கின. 'அப்பா நான் வேண்டுதல்' என்ற ராகமாலிகையைச் சாகித்யத் தெளிவுடன் ராக பாவம் ததும்பப் பாடினார்.

5ல் சென்னையில் ஜி. வி. கிருஷ்ணமூர்த்தி, ராஜலக்ஷ்மி சந்தானம் இவர்களின் கானங்கள் குறிப்பிடத் தக்கவை. முன்னவருக்கு தடித்த சாரீரம், நல்ல தேர்ச்சி, வாகதீஸ்வரி, ஜனரஞ்சனி ராகங்கள் நேர்த்தியாயிருந்தன. பின்னவருக்கு இனிய குரல், நாணயமான வழி. அவரது பூர்விகல்யாணி, பைரவி ராகங்களும் ஸ்வரப்ரஸ்தாரங்களும் வசீகரமாயிருந்தன.

7ல் திருச்சியில் டி. பி. ராமகிருஷ்ணன் நய சாரீரத்தில் நல்ல உருவுபடியுடன் ஏராளமாய் ராகங்களையும் உருப்படிகளையும் வாரியளித்தார். சாருகேசி, வஸந்தா, மால்கோஷ் ராகங்கள் வனப்பாயிருந்தன.

8ல் சென்னையில் பிற்பகலில் 1 மணி நேரம் பாடிய ஸ்ரீமதி சத்யநாராயணனின் கச்சேரி மொத்தத்தில் ஹாஸ்யச் சுவையைப் பொழிப்பியது. காதைப் பிளக்கும் கணீர்க் கொண்ட குரல். ராகங்களைக் கத்தரிக்காய் வாழைக்காய்போல் வெட்டித் தள்ளினார். தன்யாசியிலும் செஞ்சுருட்டியிலும் அவர் செய்த அட்டகாசத்தில் அவை பதறிப் போய் விட்டன. இத்தகைய ஒரு மணி நேரக் கச்சேரி புதுமையிலும் புதுமை!

ஆகஸ்டு 21ல் திருச்சியில் கே. எஸ். ராஜம் ஐயங்கார் நய சாரீரத்தில் நல்வழியுடன் தன்யாசி, பைரவி ராகங்களைத் திறம்படக் கையாண்டார். 'நீசித்தமு' கிருதியில் நிரவல் ஸ்வரங்கள் நயமாயிருந்தன. அன்று அதே நிலையத்தில் பாடிய சாவித்ரீ கணேசனின் ரஞ்சனி, கல்யாணி ராகங்களும் உருப்படிகளும் இனிமையாயும் சுத்தமாயு மிருந்தன.

22ல் திருச்சியில் அமைந்த கும்பகோணம் பாலுவின் முழு நேரக் கச்சேரி மொத்தத்தில் நன்றாய் வாய்த்தது. மதுரமான குரலும் விறுவிறுப்பும் கொண்ட கானமாய்க் கேட்டது. தோடி, பந்துவராளி, பைரவி ராகங்களும் 'பாரோ இவர் யாரோ' உருப்படியில் விழுந்த நிரவல் ஸ்வரங்களும் நயமாயிருந்தன.

23ல் திருச்சியிலிருந்து கேட்ட ஆத்தக்குடி ஆர். ராமமூர்த்தியின் கச்சேரி உயர்ந்த ரகமாயமைந்தது. நய சாரீரத்தில் நல்வழியுடன் பிலஹரி, சாவேரி, சங்கராபரண ராகங்களையும் உருப்படிகளையும் வழங்கினார். முன்னுக்கு வரக்கூடிய இளம் பாடகர்.

23ல் திருச்சியில், திருப்பாம்புரம் சோமசுந்தரம் சகோதரர்கள் கோகிலப்ரியாவின் ஜன்யமான கேசரி, ஷண்முகப்ரியாவின் ஜன்யமான கோகிலநந்தி, 59-வது மேளமான தர்மவதி, காமவர்த்தனியில் பிறந்த ஸந்தரமாருவ, ஷம்சத்யோதி என்ற அபூர்வ ராகங்களைப் பொழிந்தனர்.

26ல் சென்னையில் பாடிய ஜி. எ. நடராஜய்யருக்கு நடுத்தர சாரீரம். நல்ல ஞானம். பந்துவராளி, சாருகேசி, கௌடமல்லார் ராகங்களும் 'அப்பா ராமபக்தி' கிருதியில் நிரவல் ஸ்வரங்களும் தேர்ந்தியாயிருந்தன.





போட்டோ: கே. நடராஜன் எம். ஏ.


ராஜாஜி புது டில்லிக்குப் புறப்படுவதற்கு முன்னால் சென்னையில் அவருக்குப் பல உபசார விருந்துகள் நடைபெற்றன. அவற்றுள் தியாகராஜநகர் 'எவர்கிரீன்' பங்களாவில் 'ட்ரோஜன்' அண்ணாமலைச் செட்டியாரும், தமிழ்ப்பண்ணை அண்ணாமலையும் அளித்த விருந்தின் காட்சியையும், அச்சமயம் சின்ன அண்ணாமலை பெரிய குதூகலப் பிரசங்கம் செய்யும் காட்சியையும் இந்தப் பக்கத்தில் காணலாம்.

★

எதிர்ப் பக்கத்தில் ராஜாஜி புதுடில்லி சென்று ஆகாச விமானத்திலிருந்து இறங்கும் காட்சியையும், தேசத் தலைவர்கள் அரசாங்கத்தை ஒப்புக்கொண்ட அன்று வைஸ்ராய் மாளிகையின் முன்பு கூடியிருந்த ஜனத் திரளையும் பார்க்கலாம்.

★





போட்டோ: எம்.டி.கணேசன்

தற்கால ஹாஸ்யம்

பாகவதர் கதா காலக்ஷேபம் செய்து கொண்டிருக்கிறார் :—"......மனித வாழ்க்கையில் இவ்வளவு கஷ்டங்களிருக்கிறதே என்று வருத்தப்படக்கூடாது. இவ்வளவு கஷ்டங்களுக் கிடையே சுகமும் இருக்கிறதே என்று சந்தோஷப்பட வேண்டும். இது எப்படி யென்றால், இவ்வளவு கற்களிடையே அரிசியும் இருக்கிறதே என்று சந்தோஷப்படவேண்டியதைப் போலத்தான்."

—வி. எஸ். சுந்தரராஜன்.

★

பெண்ணின் தகப்பனார் :—விடிஞ்சாக் கல்யாணம். கேத்திக்கித்தானே முப்பது பேருக்கு ரேஷன் அரிசி வாங்கிக் கொண்டு வந்தேன்; இப்போது அரிசி யில்லை என்கிறாயே?

அவர் மனைவி :—நான் என்ன செய்யட்டும்? கல்லை யெல்லாம் பொறுக்கி ஔபாசனத் தாழியில் உமியாப் போட்டு விட்டேன். பாக்கி மண்ணையும் கல்லையும் பாலிகையிலே போட்டேன். மிச்சம் ஒரு பிடி அரிசி பொரியாகப் பண்ணிவிட்டேன்.

—என். ராமச்சந்திரன்.

★

ஒருவர் :—பெண்ணிற்குக் கலியாணம் செய்ய வேண்டும்; ஏதேனும் ஒரு இடம் இருந்தால் சொல்லுங்கள்.

மற்றொருவர் :—ஒரு இடம் இருக்கிறது; ஆனால் அதில் சமைப்பதற்கு இடம் கிடையாதே?

ஒருவர் :—சமையல் அறை இல்லாவிட்டால் பரவாயில்லை; அந்த இடத்தை உடனே ஏற்பாடு செய்யுங்கள்!

—எஸ். கிருஷ்ணமூர்த்தி

"சில மாதங்களுக்கு முன்னாலே சரியான வரும்படியில்லாமல் அரைப் பட்டினியும், முழுப் பட்டினியுமாயிருந்த நம்ப சோணாசலக் கவிராயர் இப்போ ரொம்பக் குஷியாயிருக்கிறாரே! ஏதாவது புதையல், கிதையல் கிடைத்ததா என்ன, அவருக்கு?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே; இப்போதான் ஊரெல்லாம் 'ஸ்டிரைக், ஸ்டிரைக்' குன்னு அவதிப்படுகிறதே; அந்த 'ஸ்டிரைக்' செய்பவர்களுக்குப் பாட்டு எழுதிக் கொடுக்கறாரு! கொள்ளை வரும்படி வருது!"

—டி. ஜி. ஸ்ரீநிவாசன்.

★

ஸ்டேஷன் மாஸ்டர் (நித்திரையில்) :—பூலாக்கினர், லெவென்டி லெவன் அவுட், டென்டி டென் ஹவர்ஸ்.

மனைவி :—என்ன, இந்த 'ஸ்ட்ரைக்' காலத்திலேயாவது கொஞ்சம் நிம்மதியா ஓய்வு எடுத்துக்காமல் என் பெனாத்திண்டிருக்கேள்!

—ஜே. லீலா.

★

மனைவி :—உங்களைத்தானே!... ராத்திரி திருடன் வந்து பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு போய் விட்டானே! போலீசுக்குச் சொல்லி யனுப்பாமல் பேசாமலிருக்கிறீர்களே!

கணவன் :—அடி அசடே! போலீஸ்காரன் வந்தால், இந்த அறையில் ஒளித்து வைக்கப்பட்டுள்ள அரிசி மூட்டைகள் எல்லாம் ஏது என்று கேட்பானே! அதற்கு என்ன பதில் சொல்லுவது?

—என். என்.

அறிவிப்பு

1-10-1946 முதல் கோயமுத்தூரில் நமது கல்கி விற்பனை ஏஜண்டு:

ஸ்ரீ கே. சுப்பிரமணியம், (சுப்பி) எம். எல். ஏ.,

91, கருப்ப கவுண்டன் தெரு, கோயமுத்தூர்

கோயமுத்தூர் வாசிகள் இவ் வருஷ கல்கி தீபாவளி மலருக்கு நமது ஏஜண்டு ஸ்ரீ சுப்பி அவர்களிடம் பதிவு செய்து கொள்ளவும்.

மானேஜர், 'கல்கி'


உங்கள் பற்களின் உள்ளும், வெளியும், இடையேயும்,
துலக்குகிறது
நீர் கடக்காது
நனைவுமேற்காது
விஷக் கிருமிகளகற்றப் பட்ட கிலாஸ் ட்யூபுகளில் பாக் செய்யப்பட்டது
ஒரு வருட உத்தரவாதம் ....அதற்கதிகம் நிற்கிறது
பற்களைத் துலக்கி, வெண்மையாக்குவதில் 60% அதிக பயனளிக்க வல்லது
இப்பொழுது ஸ்டோர்களில்—
மிருகங்களின் மயிரே கிடையாது!
Dr. West's TOOTH PASTE
Dr. West's Miracle-Tuft MEDIUM
விவரங்களுக்கு:
எல். டி. ஸெய்மூர் & கோ
(இந்தியா) லிமிடெட்
பம்பாய் — கல்கத்தா
காரச்சி — மதராஸ
டாக்டர் வெஸ்ட்ஸ்
டூத் பிரஷுகளும் டூத் பேஸ்டும்
JWT (A) LTD.

L. D. 6288



நீங்கள் விரும்புவது

காமதேனு வனஸ்பதிதான். தவிர சௌகரியமான அளவுகளில் காற்று புகாத டின்களில் கிடைப்பதுங்கூட. சிறிய, பெரிய குடும்பங்களுக்கேற்ற 1 பவுண்ட், 10 பவுண்ட் டின்களிலும் விசேஷ கொண்டாட்டங்களின் தேவைக்கேற்ற 36 பவுண்ட் டின்களிலும் கிடைக்கிறது.

இது பரிசுத்தமானது. கையால் தொடாதது. ஸீலிட்ட டின்களில்தான் விற்கப்படுகிறது. குறைந்த செலவில் நிறைந்த புஷ்டி. மணமும் இல்லாததால், பதார்த்தங்களின் சுயவாசனையைப் பாதிக்காது.



KAMADHENU
Vanaspati

FAS-221

தயாரிப்பாளர்கள் :

ஸ்ரீ மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட், மேட்டூர் அணை

மானேஜிங் ஏஜண்டுகள் :

மெஸர்ஸ். சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்., திருச்சிராப்பள்ளி

பூரண விற்பனையாளர்கள் :

ஸ்ரீ அலைடு இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிமிடெட்

120, அரமனைக்காரத் தெரு, ஜி. டி. மதராஸ்



யசோதரா

ஆசிரியர்: விச்வம்பரநாத் கௌசிக்
மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

12

டாகூர் மூன்று நாட்கள் வரை வக்கீல் வீட்டில் தங்கியிருந்தார். ராமநாத பாபு அவருக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுத்தார். கான்பூரையும் நன்றாகச் சுற்றிக் காட்டினார். மூன்றாம் நாள் டாகூர் வக்கீலிடம், "ஊரை விட்டு வந்து ரொம்ப நாளாகிவிட்டது. வீடு வாசலைக் கவனிக்க வேறு ஆளில்லை. போக வேண்டும்" என்று அனுமதி கேட்டார்.

"அதற்குள் என்ன அவசரம்? இன்னும் இரண்டு நாள் இருந்து விட்டுப் போகக் கூடாதா?" என்றார் வக்கீல்.

"இல்லை; வேலை இருக்கிறது. அதனால் தான்" என்றார் ஜமீன்தார் டாகூர்.

"சரி; அப்படியானால் நாளைக்குப் போங்கள்" என்று வக்கீல் சொன்னார்.

"சரி, நாளைக்கே போகிறேன். உங்கள் வார்த்தையைத் தட்டுவானேன்!" என்றார் டாகூர்.

டாகூர் ஊருக்குப் புறப்படப் போகிறார் என்று நிச்சயமானதை அறிந்ததும், ராமநாத பாபுவின் மனதை என்னவோ செய்தது. யசோதாவும் போய் விடுவாளே! அப்புறம் அவளை எப்படிப் பார்ப்பது! இனி இந்த வாழ்நாளில் அவளைக் காண முடியாதோ என்ற எண்ணம் அவரது உள்ளத்தை வாட்டியது. அன்று அவருக்குச் சாப்பாடே வேண்டியிருக்கவில்லை. 'உடம்பு சரியில்லை' என்று சாக்குக் கூறி விட்டுத் தனிமையில் உட்கார்ந்து கொண்டு உள்ளத்துடன் போராடலானார்.

"உன்னால்தானே இந்த நிலைமை வந்தது? முன்னோ இங்கிருந்து எப்படியாவது தொலைந்தால் 'சரி' என்று எண்ணினாயே, அதன் விளைவுதானே இது! உன் கண்களுக் கெதிரிலேயே அந்தச் சம்பவம் நடக்கப் போகிறதே!

"ஆமாம்; நான் அப்படி எண்ணியது உண்டு. ஆனால் 'அவள் போவதால் மனம் இத்தனை கஷ்டத்திற்கு உள்ளாகும்' என்று அப்பொழுது தெரியவில்லையே! தெரிந்திருந்தால் அப்படி எண்ணியிருப்பேனா! இப்பொழுது யாரோ என் உள்ளத்தைக் கவர்ந்து செல்வது போலல்லவா தோன்றுகிறது! நான் ஏன் இப்படிக் கலங்குகிறேன்? என் மூளை ஏன் இப்படிக் குழம்புகிறது? அவள் எனக்கு என்ன உறவா? அவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? அவள் தன் தாய் தந்தையருடன் சொந்த வீட்டுக்குப் போகிறாள்! அவளைத் தடுக்க நாம் யார்? அப்படித் தடுக்கத்தான் நமக்கு ஏது உரிமை?—இம்மாதிரி நடக்காமல் இருந்திருந்தால் — அவள் அனாதைப் பெண்ணாகவே இருந்திருந்தால்—எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்! சே, என்ன ஆசை! இவ்வளவு கெட்ட எண்ணம் எனக்கு எங்கிருந்து வந்தது? கேவலம் தன் சுயநலப் பூர்த்திக்காக ஒருவரை அனாதையாக்குவது மிருகத்தனம் அல்லவா?—ஆம், உண்மைதான்; அது மிருக இச்சைதான்! ஆனால், இந்த உள்ளத்திற்கு என்ன சொல்வேன்? — காது கொடுத்துக் கேட்கவே மாட்டேன் என்கிறதே......!

"பாவம், அவள் மனம் என்ன பாடு படுகிறதோ! பார்ப்பதற்கு ஊருக்குப் போகப் பிரியமுள்ளவள் போலத்தான் தோன்றுகிறது. போக ஆசை இராதா? தன் சொந்த வீட்டுக்கு — பாட்டன், பாட்டி இருக்கும் தன் சொந்த வீட்டுக்கு—சகல வசதிகளும் உள்ள தன் சொந்த வீட்டுக்குப் போக யாருக்குத்தான் மனமிராது! அவள்

இங்கே யிருக்க எதற்காக ஆசைப்படப் போகிறான்? அவனுக்கென்று இங்கே என்ன வைத்திருக்கிறது? — போனால் போகட்டும். ஆரம்பத்திலே மனது இப்படித்தான் கஷ்டப்படும். நாள் ஆக ஆக எல்லாம் தானாகச் சரியாய்ப் போய்விடும். ஆனால் ஊருக்குப் புறப்படுவதற்கு முன்பு அவளை ஒரு தடவையாவது கட்டாயம் பார்த்தாக வேண்டும். அப்படிப் பார்ப்பதன் மூலம் அவளுடைய மனதையும் ஒருவாறு தெரிந்து கொள்ளலாம் அல்லவா?"

இந்த மாதிரி யோசனையில் ஆழ்ந்திருந்த ராமநாத பாபு, ஊருக்குப் புறப்படுவதற்கு முன் அவளை ஒரு தடவையாவது பார்த்து இரண்டு வார்த்தைகள் பேசிவிடுவது என்று மனத்தில் நிர்மானித்துக் கொண்டார். பிறகு தன்னுடைய தங்கை சம்பாவதியைக் கூப்பிட்டு, "நாளை ஊருக்குப் போக வேண்டி யிருக்கும் என்று ஜல்லோவிடம் சொல்லு!" என்றார்.

சம்பாவதி, "அண்ணா! ஜல்லோ ஊருக்குப் போவது எனக்குப் பிடிக்கவில்லை" என்றாள்.

"சம்பா, என் மனதில் உள்ளதை நீ சொல்லிவிட்டாயே!" என்று கூற வாய் எடுத்த ராமநாதபாபு சிரமப்பட்டு அதை அடக்கிக்கொண்டு, துயரம் கலந்த புன்முறுவலுடன், "பிடிக்காதுதான் சம்பா! இருந்தாலும் நாம் என்ன செய்வது? அவள் அப்பா போகும் இடத்திற்குத்தானே அவளும் போகவேண்டும்?" என்றார்.

"அது சரிதான்; இவ்வளவு நாள் சேர்ந்து இருந்துவிட்டு, அவளைப் பிரிகிறது என்றால் மனதுக்கு ரொம்ப சிரமமா யிருக்கிறதே!— என் அண்ணா, அவளை இங்கேயே வைத்துக் கொள்வதற்கு ஏதாவது வழியில்லையா?" என்றாள் சம்பாவதி.

"அதெப்படி முடியும், அம்மா! அவர்கள் விட்டுவிட்டுப் போக மாட்டார்களே!"

"இதைவிட அவள் இங்கே வராமலேயே இருந்திருந்தால் நன்றா யிருந்திருக்கும்."

"உண்மை; நீ சொல்வது உண்மை தான்!" என்று ஆமோதித்தார் ராமநாத பாபு.

"எப்பொழுது போகப் போகிறாள்?"

"நாளைக்கு!"

"ரொம்ப சிரமப்பட்டு படிப்புச் சொல்லிக் கொடுத்தேன். படிப்புகூட நன்றாக வருகிறது அவளுக்கு."

"அப்படியா?"

"ஆமாம்; அவளுக்குக்கூட இங் விருந்து போக மனசு இல்லை, அண்ணா!— ஊருக்குப் போகவேண்டும் என்பதைக் கேட்டது முதல் ரொம்ப வருத்தமா யிருக் கிறாள்."

ராமநாத பாபு ஆவலுடன், "என்ன, வருத்தமா யிருக்கிறாளா?" என் கேட்டார்.

"ஆமாம் அண்ணா, அவளுக்கு சம் வெல்லாம் விட்டுவிட்டுப் போக மனமே இல்லை......ஆமாம், இத்தனை நாள் அவளை யாரும் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. நம் மிடம் வந்து இவ்வளவு பழகியபின், கோட் டான்கள் அழைத்துக் கொண்டு போக வந்துவிட்டார்கள்!" என்றாள் சம்பாவதி.

"என் சம்பா, அவர்களை இப்படி வைகிறாய்?" என்று சிரித்தவாறே கேட் டார் ராமநாத பாபு.

"பின்னே என்ன அண்ணா?......அது களைக் கண்டாலே எனக்குப் பிடிக்க வில்லை!"

"அதிருக்கட்டும்; நீ ஒன்று செய். ஜல்லோவை என்னிடம் அனுப்பு. அவள் மனதைத் தெரிந்துகொண்டு, முடியுமானால் அவளை இங்கேயே தங்கவைக்க ஏற்பாடு செய்கிறேன்" என்றார் ராமநாதபாபு.


"எப்படியாவது அவளை இங்கேயே இருக்கச் செய்துவிடு, அண்ணா! இதோ போய் அவளை அனுப்புகிறேன்" என்று கூறி விட்டுச் சம்பாவதி போய் விட்டாள்.

சிறிது நேரத்திற் கெல்லாம் யசோதரா வருத்தந் தோய்ந்த முகத்துடன் தலை குனிந்தவாறே, ராமநாத பாபுவின் முன்னால் வந்து நின்றாள்.

13

யசோதராவைக் கண்டதும் அவளை மார்புறத் தழுவிக் கொள்ள வேண்டும் போல இருந்தது ராமநாத பாபுவுக்கு. ஆனால் அவரது உள்ளத்தில் குடிகொண்டிருந்த சாத்வீக ஸ்வபாவமும், பெருந்தன்மையும் அவரை அப்படிச் செய்ய விடவில்லை.

இருவரும் சிறிது நேரம் மௌனமா யிருந்தனர். யசோதரா தலை குனிந்தவாறு கால் கட்டை விரலினால் தரையைக் கீறியவண்ணம் நின்று கொண்டிருந்தாள். ராமநாத பாபு அவளையே உற்று நோக்கியவாறு சிறிது நேரம் இருந்து விட்டு, "ஜல்லோ!" என்றார்.



யசோதாரா முன்போலவே தலை குனிந்து கொண்டு, "என்ன?" என்று கேட்டாள்.

"நாளைக்கு உன் அப்பா, தாத்தா எல்லாரும் உன்னை ஊருக்கு அழைத்துக் கொண்டு போகப் போகிறார்கள்."

"என்ன, நாளைக்கேயா?"

"ஆமாம்."

"அப்பா எப்பொழுது திரும்பி வருவார்?"

"இனிமேல் எதற்குத் திரும்பி வரப் போகிறார்?"

"உங்கள் வீட்டில் வேலை செய்கிறாரே, திரும்பி வர வேண்டாமா?"

யசோதாராவின் இந்தச் சரள ஸ்வபாவத்தைக் கண்டு ராமநாத பாபு சிரித்தவாறு, "உன் தாத்தா ரொம்பப் பெரிய பணக்காரர். இனிமேல் உன் அப்பாவை வேலை செய்ய விடுவாரா?" என்றார்.

யசோதாராவின் வதனத்தில் கவலை சூழ்ந்தது. "அப்படியானால் அப்பா இனிமேல் இங்கே திரும்பி வரமாட்டாரா?" என்று கேட்டாள்.

"ஆமாம்; நீயும் இனிமேல் திரும்பி வர முடியாது!"

யசோதாராவின் முகத்தில் வருத்தம் இன்னும் அதிகமாகக் குடிகொண்டது. "அப்படிச் சொல்லாதீர்கள்!" என்று ஆரம்பித்த அவளுடைய கன்னங்கள் வெட்கத்தினால் சிவந்தன. இதைக் கண்ட ராமநாத பாபுவின் உள்ளத்திலிருந்து நீண்ட பெரு மூச்சு வெளிவந்தது.


"நானா இப்படிச் சொல்கிறேன்? என் சக்திக்குட்பட்ட விஷயமாயிருந்தால்..." என்று ஆரம்பித்த அவர் வெகு பிரயாசையுடன் தன் உள்ளத்து எழுச்சியை அடக்க முயன்றார்.

இச்சமயம் தலை நிமிர்ந்து நோக்கிய யசோதாராவின் கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது. "என் பாபுஜி, இனிமேல் நான் உங்களைப் பிரிந்து போக வேண்டியதுதானா?" என்று தழுதழுத்த குரலில் கேட்டாள்

ராமநாத பாபுவும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "நான் என்ன செய்வது, ஐஸ்லோ! என் சக்திக்குட்பட்ட விஷயமாக மட்டும் இருந்திருந்தால் உன்னை நான் போகவே விடமாட்டேன். ஆனால் நான் என்ன செய்வது?" என்றார்.

மறுபடியும் உயர எழும்பிய யசோதாராவின் கண்கள் அவருடைய கண்களைச் சந்தித்தன. அவரது கண்களில், தன்னையே அர்ப்பணம் செய்துவிட்ட பாவம் ததும்பி

வீண் பழி!



முதல் பண்டாரம்:—என்னங்க, இங்கேவிப் பண்டாரம்! என்ன முகப் பவுடர் போட ஆரம்பிச்சுட்டீங்களா?

இங்கேவிப் பண்டாரம்:—அட, நீங்க ஒரு பக்கம்! விபூதிங்க இது! டப்பா ஒண்ணும் அம்புடல்லேன்னு காலிப் பவுடர் டப்பாவிலே விபூதியைப் போட்டு வச்சிருக்கேன்!

நின்றது. ராமநாத பாபு அந்தப் பார்த்து மயங்கி நின்றார்.

"ஜஸ்லோ, நான் என்ன செய்வது? நானும் உன்னைப்போல் பிறருக்குக் கீழ் அடங்கி யிருப்பவன். இல்லாவிட்டால்...... இல்லாவிட்டால்......" என்று கூறியவாறே இரு கைகளாலும் தன் தலையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார் ராமநாதபாபு.

சிறிது நேரம் கழித்துத் தலை நிமிர்ந்த ராமநாத பாபு, "ஜஸ்லோ, நீ போவது தான் சரி; இங்கிருப்பது சரியாகப் படவில்லை!" என்று அலறினார்.

யசோதரா, பதைபதைப்புடன் "ஏன்?" என்று வினவினாள்.

"காரணம் என்ன என்று தெரிந்து கொள்ள விரும்புகிறாயா? வேண்டாம்; காரணம் அறியவேண்டாம், — ஜஸ்லோ! உனக்குத்தான் காரணம் தெரியுமே? என் தெரிந்தும் தெரியாதவளாகக் காட்டிக் கொள்கிறாய்?"

"எனக்கு ஒன்றும் தெரியாது."

ராமநாத பாபு எழுந்து அவளருகில் சென்று, "என்ன! உனக்குத் தெரியாதா? நிஜத்தைச் சொல்லு; என்னைப் பார்த்துச் சொல்லு. உனக்கு உண்மையாகவே தெரியாதா!" என்றார்.

குனிந்த தலை நிமிராமல் நின்ற யசோதராவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

ராமநாத பாபு, வருத்தம் தோய்ந்த புன் முறுவலுடன், "ஜஸ்லோ, உனக்கு எல்லாம் தெரியும்! நான் உன்னை முதன் முதலி பார்த்த நாளை என்னவென்று சொல்வது எனது அமைதியும் சுகமும் நிலவிய வாழ் கையைத் துக்ககரமானதாகவும் அமை யற்றதாகவும் ஆக்கிவிட்டாய்! நீ ஒ பிச்சைக்காரி என்று எண்ணி நா உனக்கு இடம் அளித்தேன். ஆனால் நீயே ராணியாகக் காட்சி அளிக்கிறாய்! — பிச்சைக்காரியாகவே இருந்திருந்தா எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்? கடவு உனக்குச் சகல சுகமும் அளித்தால் என குச் சந்தோஷமே! போய் வா. நீ எ வீட்டில் பிச்சைக்காரியாக நுழைந்தா போகும்பொழுது ராணியாகப் போகிறா போய் வா, ஜஸ்லோ! ஆனால் நீ ஒரு பிச்சை காரி என்று அறிந்திருந்தும், தனது உள்ள கோயிலின் தேவியாக உன்னைப் பூஜித் வனை எப்பொழுதும் ஞாபகம் வை துக் கொள்" என்று சொன்னார். மே பேசவிடாமல் அவருடைய தொண்ட அடைத்தது. தன் முகத்தைத் திருப்பி கொண்டார்.

யசோதரா திடீரென்று தரையி அமர்ந்து ராமநாத பாபுவின் கால்களை பிடித்துக் கொண்டு தழதழத்த குரலில் "என்னைத் தள்ளி விடாதீர்கள் — தள் விடாதீர்கள்!" என்றாள்.

"நான்தான் என்ன செய்வது? நீதா என்ன செய்வாய்! இதெல்லாம் வீண் ஜஸ்லோ! தலையில் எழுதிய எழுத்துப்படி தான் எல்லாம் நடக்கும்."

"நான் உங்களது பாதாரவிந்தத்தை விட்டுப் போகவே விரும்பவில்லை."

"நீ போகத்தான் வேண்டும். அங்கே உனக்குச் சகலவித சௌக்கியங்களும் கிட்டும். தாத்தா, பாட்டி எல்லாரும் உன்னை வெகு அருமையாகப் பாதுகா பார்கள். நீ ராணி போன்று விளங்கலாம். நீ போய்த்தான் ஆகவேண்டும்" என்றா ராமநாதபாபு, சிறிது தாழ்ந்த குரலில்.

"நான் பிச்சைக்காரிதான். பிச்சை காரியாகவேதான் இருக்கவும் விரும்பு கிறேன்."

"நீ விரும்பி என்ன ஆகப்போகிறது? உனக்குப் பெரியவர்கள் விரும்புவதுதான் நடக்கும்!"

"எனக்கு நீங்கள் தான்......"

"என்ன குழந்தைபோல் பேசுகிறாயே! காலை விட்டுவிடு. யாராவது பார்த்து விட்டால் நன்றாயிராது!"

யசோதரா ராமநாத பாபுவின் கால்களை விட்டுவிட்டு எழுந்து நின்று கண்களைத் துடைத்துக் கொள்ள ஆரம்பித்தாள்.

ராமநாத பாபு போய் நாற்காலியில் உட்கார்ந்தார். அதே சமயம் யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது. ராமநாத பாபுவும் நன்கு உட்கார்ந்து கொண்டார். யசோதராவும் அப்பால் விலகி நின்றாள்.

" அண்ணா, என்ன ஆயிற்று?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தாள் சம்பாவதி.

" என்ன ஆகிறது? எல்லாம் நம் கையில் இருக்கிறதா?" என்றார் ராமநாத பாபு.

" ஐஸ்லோ என்ன சொல்லுகிறான்?"

"ஐஸ்லோ என்ன சொல்லக் கிடக்கிறது! தாத்தா, பாட்டி சொல்கிறதுபோல அவன் நடந்தாக வேண்டும்."

" அதுதான் இருக்கவே இருக்கிறதே! அவன் என்ன சொல்கிறான்?"

" நீயேதான் கேட்டுப் பார்."

" நீ கேட்கவில்லையா?"

" கேட்டேன், அவனுக்குப் போக இஷ்டமில்லை."

" அப்படியானால் அவளுடைய தாத்தாவிடம் சொல்வேன்."

" சொன்னால் சரியாகப் போயிற்றா? அவர்கள் கேட்க வேண்டாமா? பிறந்தி யார் வீட்டில் பெண்ணை விட்டு விட்டுப் போவார்களா?"

"இவ்வளவு நாள் அந்தத் தாத்தா, பாட்டி எங்கே போனார்களோ? இப்பொழுது வந்து அழைத்துக் கொண்டுதான் போவோம் என்று பிடிவாதம் பிடிக்கிறார்கள்! நன்றாயிருக்கிறது!"

" இந்த வீண் பேச்செல்லாம் எதற்கு? அவர்கள் அழைத்துப்போனால் தடுப்பதற்கு நீ யார்?"

" நீ அவளுடைய அப்பா—தாத்தாவிடம் சொல்லிப் பாரேன், அண்ணா!"

" நான் சொல்லி ஒன்றும் கேட்க மாட்டார்கள்!"

" அப்படியானால் நானே சொல்லிப் பார்க்கிறேன்—வா! ஐஸ்லோ, நாம் போவோம்" என்று கூறி யசோதராவை அழைத்துக் கொண்டு வெளியே போய் விட்டாள் சம்பாவதி. (தொடரும்)

ஏமாந்தது யார்?

தங்கம்

ஒருநாள் ஒரு முயல் தன் எஜமானனுடைய தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தது. அப்பொழுது அங்கே வந்த ஒரு கரடி, "நீதானா பாலன்?" என்று முயலைப் பார்த்துக் கேட்டது.

"ஆமாம்; என் பெயர்தான் பாலன்!" என்றது முயல்.

"நீ இதற்கு முன் ஜமீன்தார் புலியின் தோட்டத்தில் வேலை செய்திருக்கிறாயா?"

"ஆமாம்; இரண்டு மூன்று வருஷம் அவர் தோட்டத்தில் வேலை செய்தேன். அவர் சிங்கப்பூருக்குப் போனார். அப்புறம் நான் வேலையிலிருந்து விலகிக்கொண்டேன்."

"சிங்கப்பூருக்குப் போன புலி ஜமீன்தார் அங்கேயே காலமாகி விட்டார். நான் அவருடைய வக்கீல். அவர் உனக்குக் கொஞ்சம் பணம் கொடுக்கச் சொல்லி எழுதியிருந்தார்" என்று சொல்லி, கரடி முயலிடம் ஒரு பையைக் கொடுத்தது. முயல் அந்தப் பையை வாங்கிக் கொண்டு சந்தோஷத்துடன் வீட்டுக்குச் சென்றது.

வீட்டுக்குப் போய் அந்தப் பையை அவிழ்த்துப் பார்த்ததும் முயலுக்கு ஆச்சரியமும் ஆனந்தமும் தாங்கவில்லை. ஒரு முறை, இரண்டு முறை, மூன்று முறை எண்ணிப் பார்த்தது முயல். பையில் சரியாய் இரண்டாயிரம் ரூபாய் இருந்தது. உடனே அதற்கு ஒரு கவலை தோன்றியது.

முயலின் கவலைக்குக் காரணம் அதன் எஜமானக் குரங்கின் பிள்ளை அங்கதன்தான். அங்கதன் ரொம்ப விஷமக்காரக் குரங்கு. அது அடிக்கடி தோட்டக்கார முயலின் வீட்டுக்கு வரும். அங்கே ஏதாவது நல்ல சாமான் கண்ணில் பட்டால் எடுத்துக் கொண்டு போய் விடும். அந்த அங்கதனுக்குத் தெரியாமல் இந்தப் பணப் பையை எங்கே வைப்பது என்று முயல் யோசனை செய்தது. கடைசியில் அதற்கு ஒரு யோசனை தோன்றியது. அதன்படி முயல், பையை எடுத்துக் கொண்டு குரங்கின் தோட்டத்துக்கு ஓடியது. அங்கே ஒரு பெரிய ஆல மரம் இருந்தது. அந்த ஆலமரத்தில் ஒரு பொந்து இருந்தது. முயல் சுற்று முற்றும் பார்த்துவிட்டுப் பையை அந்தப் பொந்துக்குள் வைத்துவிட்டுப் போய் விட்டது.

இவ்வளவையும் மரத்தின்மேலேயிருந்த அங்கதன் பார்த்துக் கொண்டிருந்தது. முயல் கீழே இறங்கிப் போனதும் மரத்தின் உச்சியிலிருந்து ஒரே தாவாகத் தாவி வந்து அந்தப் பொந்திலிருந்த பையை எடுத்துக்கொண்டு போய்த் தன் தகப்பனாராகிய ஜமீன்தார் குரங்கிடம் கொடுத்து விட்டது.



பையைப் பரபரப்புடன் அவிழ்த்துப் பார்த்த குரங்கு ஜமீன்தார் அப்படியே பிரமித்துப் போய், "இது உனக்கு எங்கே கிடைத்தது?" என்று கேட்டார்.

"அப்பா, இதைத் தோட்டக்கார முயல் ஒரு இடத்தில் ஒளித்து வைத்திருந்தது. அதற்குத் தெரியாமல் நான் இதை எடுத்துக்கொண்டு வந்தேன்!"

"சரி, நீ போய் விளையாடு. இதைப் பற்றி ஒருவரிடமும் சொல்லாதே!" என்று கூறிவிட்டுக் குரங்கு ஜமீன்தார் அந்தப் பையை ஓர் இடத்தில் பத்திரப் படுத்தி வைத்தது.



மறுநாள் அதிகாலையில் முயல், குரங்கு ஜமீன்தார் வீட்டுக்கு வந்தது. "எஜமான், எனக்கு ஒரு மாதம் லீவு வேண்டும். என் சொந்த ஊருக்குப் போகவேண்டி யிருக்கிறது!" என்றது.

குரங்கும் உடனே அதற்குச் சம்மதித்து விட்டது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அங்கதனுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. "அப்பா, தோட்டக்கார முயல் பணப் பையைத் தான் வைத்த இடத்தில் போய்ப் பார்க்கப் போகிறது! ஹஹ், ஹஹ், ஹா!" என்று விழுந்து விழுந்து சிரித்தது.

"நான் அதை ரொம்பவும் பத்திரமான இடத்தில் அல்லவா வைத்திருக்கிறேன்? அந்த இடத்தைத் தோட்டக்கார முயலின் தாத்தா வந்தால்கூடக் கண்டு பிடிக்க முடியாது!" என்று தகப்பன் குரங்கு பெருமை யடித்துக்கொண்டது.

"அப்பா, அந்தப் பையை அப்படி எந்தப் பத்திரமான இடத்தில் வைத்திருக்கிறாய்?" என்று கேட்டது அங்கதன்.

"நம்ம தோட்டத்தில் இருக்கும் ஆலமரப் பொந்திலேதான் வைத்திருக்கிறேன்!"


இதைக் கேட்டதும் அங்கதனின் முகம் பேய் அடித்தது போல் ஆகிவிட்டது. "ஐயோ! நான் அங்கே யிருந்துதானே அந்தப் பையை எடுத்துக் கொண்டு வந்தேன்!" என்று அது சோகக் குரலில் கூறியது.

குரங்கு ஜமீன்தார் திருடனுக்குத் தேள் கொட்டின மாதிரி, இந்த விஷயத்தை ஒருவரிடமும் தெரிவிக்காமல் இருந்துவிட்டது.




வாங்க வந்தவர்:—என்ன ஐயா, இது! இந்தப் பிள்ளையார்களுக் கெல்லாம் தொந்தி ரொம்பச் சின்னதா யிருக்கிறதே?

சிற்பி:—பின்னே, பஞ்ச விநாயகருக்குத் தொந்தி எப்படி யிருக்கும்?




பழையதோ அல்லது புதியதோ

உங்கள் காருக்கு



உயர்தரமானது மிகவும் முக்கியம்
வற்புறுத்திக் கேளுங்கள்



Firestone

பயர்ஸ்டோன்
'கம் - டிப்பிடு டயர்கள்'

M. 19/46

அக்ஷராப்பியாசம்

விந்தன்

"பால் மணம் மாறாத பச்சிளங் குழந்தைகளை வறுமையின் காரணமாக வேலைக்கு அனுப்பும் அநீதி, அக்கிரமம், கொடுமை, குரூரம் — என்று இந்தியாவை விட்டு ஒழிகிறதோ, அன்றுதான் அந்த நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைய முடியும்" என்று ஆங்கிலப் பேராசிரியர் ஒருவர் கூறியிருப்பதை வாத்தியார் வைத்தியலிங்கம் பிள்ளை அறிந்தவர்தான். ஆனாலும் அவர் என்ன செய்ய முடியும்?

மாதா கோயிலின் மணி யோசையிலிருந்து மணி ஒன்பது என்று தெரிந்தவுடனே, வாத்தியார் வைத்தியலிங்கம் பிள்ளை தலைப்பாகையை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு, தம் சகதர்மிணியிடம் "போகிறேன்!" என்பார்.

"அபசகுனம் மாதிரி 'போகிறேன், போகிறேன்!' என்று சொல்லாதீர்கள் என்று உங்களுக்கு எத்தனை தரம் சொல்வது? 'போய் வருகிறேன்!' என்று சொல்லுங்களேன்!" என்று நடுவில் ஒரு சிறு திருத்தம் செய்வாள் அவள்.

"ஆமாம், நான் போய்விட்டால் உலகமே அஸ்தமித்து விடுமோ? என்னுடைய வாக்கு எனக்கே பலித்து, இன்றே நான் ஒரேயடியாய்ப் போய் விட்டால்கூடக் குற்றமில்லைதான்!" என்பார் வாத்தியார் வெறுப்புடன்.

"அதற்கு ஏன் நீங்கள் என்னைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமாம்?" என்று அவள் தன் மேலாக்கை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொள்வாள்.

"அடி, அசடே! நான் மட்டுமா உன்னைக் கல்யாணம் செய்து கொண்டேன்? நீயுந்தானே என்னைக் கல்யாணம் செய்து கொண்டாய்?" என்று சொல்லி வலுவில் சிரிப்பை வரவழைத்துக் கொள்வார் வாத்தியார். உடனே அவருடைய சகதர்மிணியின் கோபமும் ஒருவாறு தணிந்து விடும். அவ்வளவுதான்; வாத்தியார் பள்ளிக்கூடத்தை நோக்கிப் பரபரப்புடன் நடக்க ஆரம்பித்து விடுவார்.

வழியெல்லாம் அவருக்குத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் — அவரிடம் படித்தவர்கள், படிக்காதவர்கள் — இப்படி எத்தனையோ பேர் இருப்பார்கள். அவர்களெல்லாம் இவரைக் கண்டதும், "என்ன, வாத்தியார்வாள்! நமஸ்காரம்— சௌக்கியந்தானே?" என்று கைகூப்பிய வண்ணம் வழக்கம்போல் ஒரு அசட்டுக் கேள்வியைக் கேட்டு வைப்பார்கள்.

"நேற்றுத்தான் வாத்தியார் சௌக்கியமாயிருந்தாரே, இன்று அவருடைய சௌக்கியத்திற்கு என்ன ஆபத்து வந்து விட்டிருக்கப் போகிறது!" என்று எண்ணி, அவர்கள் ஒரு நாளாவது சும்மாயிருக்க வேண்டுமே!—கிடையாது. தினசரி கேட்டுக்கொண்டே இருப்பார்கள்!

வாத்தியாரும் அவர்களுக்குச் சளைக்காமல், "நமஸ்காரம் — சௌ...க்...கி...ய...ந்...தா...ன்...!" என்று முகஸ்துதிக்காக ஒரு பச்சைப் பொய்யைச் சொல்லி விட்டு மேலே நடந்து செல்வார்.

இடையே கோயில்கள் வேறு வந்து குறுக்கிடும். வாத்தியார் வைத்தியலிங்கம் பிள்ளையைவிட எத்தனையோ விதத்தில் உயர்ந்தவர்கள் பலர், காரிலும் மற்ற வாகனங்களிலும் அதே ரஸ்தாவில்தான் சென்று கொண்டிருப்பார்கள் — அவர்களெல்லாம் தங்களைக் குறுக்கிடும் கோயில்களைப் பற்றி லட்சியம் செய்வதே இல்லை. இந்த விஷயத்தில் வாத்தியார் வைத்தியலிங்கம் மட்டும் அவர்களுக்கு நேர் விரோதம். எந்தக் கோயிலைக் கண்டாலும் சரி, அவர் உடனே தமது பாதரட்சைகளைக் கழற்றிக் கீழே விட்டுவிட்டு, பவ்யமாக ஒரு 'கும்பிடு' போட்டுவிட்டுத்தான் அப்பால் செல்வார். விஷ்ணு கோயில், சிவன் கோயிலாயிருந்தால் இந்த ஒரே ஒரு கும்பிடோடு சரி — விநாயகராயிருந்து விட்டாலோ தொல்லைதான்! பிரதட்சணம் வருவதோடு தோப்புக்கரணம் போட வேண்டும்; காதைப் பிடித்துத் திருகிக் கொள்வதோடு கன்னத்திலும் அறைந்து கொள்ள வேண்டும்; இதெல்லாம்தான் போகட்டும் என்றால், தலையில் வேறு 'டக், டக்'கென்று குட்டிக் கொள்ள வேண்டும்!

இதில் ஆச்சரியம் என்னவென்றால், மேற்கண்டவாறு கோயிலுக்குக் கோயில் நின்று தொழுது சென்ற வாத்தியார், பூலோகத்தில் நரகத்தைக் கண்டார்; தொழாமலே சென்றவர்களோ, சொர்க்கத்தைக் கண்டார்கள்!

இந்த ரீதியில் தினசரி செல்லவேண்டுமே என்பதற்காகத்தான் அவர் தம்

மூடைய வீட்டிலிருந்து இரண்டு பர்லாங் தூரத்திலிருக்கும் பள்ளிக் கூடத்திற்கு ஒன்பது மணிக்கே கிளம்பி விடுவது வழக்கம்!

★

வாத்தியார் வைத்தியலிங்கம் பிள்ளை எத்தனையோ விதத்தில் கொடுத்து வைத்தவர். தங்களுடைய பிள்ளைக்குக் கல்யாணம் ஆகும்வரை தாங்கள் இருந்தால் போதும் என்று பகவானை அல்லும் பகலும் அனவரதமும் பிரார்த்தனை செய்து கொண்டு வந்த அவருடைய பெற்றோர், அவருக்கு ஏழாவது குழந்தை பிறந்துங்கூட உயிருடன் இருந்தார்கள்; கல்யாணம் பண்ணிக்கொண்டு புக்ககம் போன தங்கை, அண்ணாவை நெடுநாள் பிரிந்திருக்க மனமில்லாமலோ என்னவோ, அடுத்த வருடமே விதவைக் கோலத்துடன் பிறந்தகம் வந்து சேர்ந்துவிட்டாள்; அவருடைய மனைவி மங்களமும் ஸ்ரீதனமாக ஒன்றும் கொண்டு வராமற் போகவில்லை—தன்னுடன் பெற்றோரை யிழந்த இரண்டு தங்கைமாரைக் கட்டிக் கட்டியாகக் கொண்டு வந்தாள்!

இத்தனை விஷயங்களில் கொடுத்து வைத்திருந்த வாத்தியார், பாவம்!—ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் ஏனோ கொடுத்து வைக்கவில்லை. அதாவது, அவருக்குப் பிறந்த ஏழு குழந்தைகளும் உயிரோடு இருக்கவில்லை. என்ன இருந்தாலும் கடவுள் கருணையுள்ளவரல்லவா? அவற்றில் ஆறு குழந்தைகளைத் தம்மிடம் அழைத்துக் கொண்டு விட்டார். இரண்டாவதாகப் பிறந்த ஒரே ஒரு ஆண் குழந்தை மட்டும்தான் அவருக்கு இருந்தது. அதற்கு இப்போது ஐந்தாவது வயது நடந்துகொண்டிருந்தது. ஆக எட்டு ஜீவன்களும் வாத்தியார் வைத்தியலிங்கம் பிள்ளையின் வரும்படியை எதிர்பார்த்துத்தான் தங்கள் காலத்தைக் கழித்து வந்தன.

இந்தக் காலத்தில்தான் எந்தக் கிரகஸ்தனுக்கும் சிக்கனத்தைப் பற்றி யாருமே உபதேசிக்க வேண்டிய அவசியமில்லையே!—அரிசி, பருப்பு, மண்ணெண்ணெய், விறகு, சர்க்கரை, துணிமணி எல்லாவற்றையுமே சர்க்கார் அவரவர்களுக்கு இவ்வளவுதான் என்று திட்டமாக—அதாவது, உயிரோடு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி—அளந்து கொடுத்து விடுகிறார்கள். ஆனால், அவற்றையாவது வாங்குவதற்குப் போதிய சம்பளம் எல்லோருக்கும் கிடைக்கிறதா என்பதைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதே கிடையாது. ஒருவேளை எல்லோருமே நம்முடைய திட்டப்படி எல்லாவற்றையும் 'தாராள'மாக வாங்கி, 'சிக்கனம்' என்ற விஷயத்தையே ஏன் அடியோடு மறந்து போக வேண்டும் என்ற பெருந்தன்மைதான் அதற்குக் காரணமாயிருக்குமோ, என்னமோ!

இந்த லட்சணத்தில்தான் தன்னுடைய ஏக புத்திரனான ஜயசந்திரனுக்கு நல்ல முறையில் அக்ஷராப்பியாசம் செய்து வைக்க வேண்டுமென்று விரும்



பிறன் மங்களம். அதற்கேற்றாற்போல், அவர்கள் இருக்கும் தெருவுக்கு அடுத்த தெருவில் வசிக்கும் கணபதி என்பவன்—சின்னஞ் சிறு வயதில் வைத்தியலிங்கம் பிள்ளையிடம் கல்வி கற்றவன் — அன்று கையில் அக்ஷராப்பியாசப் பத்திரிகையுடன் வாத்தியாரைத் தேடிக் கொண்டு வந்தான்.

"வாடா, வா! என்ன விசேஷம்?" என்று வாத்சல்யத்துடன் கேட்டுக் கொண்டே அவனை வரவேற்றார் வைத்தியலிங்கம்.

"என் குழந்தை கண்ணனுக்கு இம் மாதம் 23உ அக்ஷராப்பியாசம்; தங்களுக்குப் பத்திரிகை வைத்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்" என்று சொல்லிக் கொண்டே ஒரு பத்திரிகையை எடுத்து அவரிடம் மிகவும் மரியாதையுடன் நீட்டினான் கணபதி.

"ரொம்ப சந்தோஷம்!" என்று சொல்லிப் பத்திரிகையை வாங்கிக் கொண்டார் வாத்தியார்.

"என்னமோ, எல்லாம் உங்கள் புண்ணியந்தான்! அன்று நீங்கள் என்னைத் தெருத் தெருவாகத் தேடி யலைந்து இழுத்துக் கொண்டு போய் அத்தனை அக்கரையுடன் பாடம் சொல்லிக் கொடுத்திரா விட்டால் இன்று நான் என்ன கதி யடைந்திருப்பேனோ! ......"

"உம்... என்னுடைய புண்ணியமாவது ஒன்றாவது! எல்லாம் கடவுளின் கிருபை! ......"

"அப்படிச் சொல்லிவிட முடியுமா? கடவுளோடு தாங்களும்தான் தயவு வைத்தீர்கள்!—எது எப்படியானாலும் குழந்தையின் அக்ஷராப்பியாசத்திற்குத் தாங்கள் அவசியம் வந்து விட வேண்டும். கண்ணனையும் உங்கள் பள்ளிக் கூடத்தில்தான் சேர்த்து விடலாமென்று இருக்கிறேன். நீங்கள்தான் அவனைக் கவனித்துக் கொள்ள வேண்டும்......"

"அதற்கென்ன, ஆகட்டும்."

"நான் வரட்டுமா?—நமஸ்காரம்!"

"உம் ......"

கணபதி வெளியே போய்விட்டான்; மங்களம் ஆரம்பித்தாள்.

"ஏன்னா! நம்ம ஜயசந்திரனுக்கு ஐந்து வருஷங்கள் பூர்த்தியாகி ஆறாவது வருஷம் கூடப் பிறக்கப் போகிறதே, இன்னும் எப்பொழுதுதான் அவனுக்கு அக்ஷராப்பியாசம் செய்து வைக்கப் போகிறீர்கள்?"

"ஆமாண்டி, ஆமாம்! நாம் இருக்கிற லட்சணத்துக்கு அவனுக்கு அக்ஷராப்பியாசம் செய்து வைக்காமலிருப்பது தான் குறை!"

"என்ன, அப்படிச் சொல்கிறீர்களே! இருப்பது ஒரே குழந்தை ......"

"நான் மட்டும் இரண்டு என்றா சொல்கிறேன்!"

"உங்கள் பரிகாசமெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். நான் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லுங்கோ!"

"என்னடி, உனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? வயிற்றுச் சோற்றுக்கே வரும்படி போதாமல் மாதம் பிறந்தால் பத்தும் இருபதுமாகக் கடன் வாங்கிக் காலக்ஷேபம் செய்யவேண்டியிருக்கிறது. அக்ஷராப்பியாசம் என்கிறாயே!"

"ஆமாம், ஊர்ப் பிள்ளைகளெல்லாம் உங்களைக் கொண்டு படிக்க வேண்டும்; உங்கள் பிள்ளை மட்டும் தற்குறியாகத் திரிய வேண்டுமாக்கும்!"

"அதற்கென்ன, அப்படியா விட்டு விடுவேன்? ஏதாவது ஒரு வழி செய்ய மாட்டேனா?"

"எப்போது செய்வது?"



"இவர் தலைமை வகிப்பதில் இந்தக் கூட்டத்தில் சிலருக்கு! ஆக்ஷேபணை இருப்பதாகத் தெரிகிறது. அப்படி ஆக்ஷேபிக்கிறவர்கள் தயவு செய்து கையைத் தூக்கலாம்!"

"சரியாய்ப் போச்சு; தயவு செய்து கொஞ்ச நேரம் பேசாமலிரேன்! அதைப் பற்றி அப்புறம் பேசிக் கொள்ளலாம். இப்போது, வீட்டுச் செலவுக்கு இம் மாதம் யாரிடம் இருபது ரூபாய் மேற் கொண்டு கடன் வாங்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். எனக்குத் தெரிந்தவர்களிலோ ஒருவர் கூடப் பாக்கி கிடையாது; எல்லோரிடமும் வாங்கியாகி விட்டது. புதிதாகத்தான் யாரையாவது பிடிக்க வேண்டும். யாரைப் பிடிப்பது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறேன். இந்தச் சமயத்தில் என்னை ஒன்றும் தொந்தரவு செய்யாதே!" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார் வாத்தியார்.

"உங்களுக்கு ஏன் பெண்டாட்டியும் பிள்ளையும் என்று எனக்குத் தெரியவில்லையே!" என்று எரிந்து விழுந்தாள் மங்களம்.

"உனக்கு ஏன் புருஷனும் பிள்ளையும் என்று எனக்கும்தான் தெரியவில்லை!" என்றார் வாத்தியாரும் வெறுப்புடன்.

★

இந்தச் சம்பவம் நடந்து ஏறக் குறைய ஒரு மாதம் ஆகியிருக்கும். என்று மில்லாத திருநாளாய் அன்று வாத்தியார் பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போதே ஆனந்த பரவசத்துடன் வந்தார். இந்தக் கோலத்தில் அவரைக் கண்ட மங்களம், "என்ன விசேஷம்?" என்று உற்சாகத் துடன் கேட்டுக் கொண்டே சமைய லறையிலிருந்து வெளியே வந்தாள்.

"ஏதாவது விசேஷம் இல்லாமற்கூட நான் இப்படி யிருப்பேனா? நீயுந்தான் இத்தனை வருஷமாக என்னுடன் குடித் தனம் செய்து கொண்டு வருகிறாயே, என்னைப் பற்றிக் கொஞ்சமாவது தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறாயா? வாழ்க்கையில் என்றைக்காவது ஒரு நாள் நான் சந்தோஷமா யிருக்கிறே னென் றால், அன்று எங்கேயாவது பத்தோ, இருபதோ கடன் வாங்கியிருப்பேன்...!"

"பேசுகிறீர்களே, நீங்களும் ஓர் ஆண் பிள்ளை மாதிரி! பையனின் அக்ஷராப்பி யாசத்திற்காகத்தான் ஏதாவது ஏற் பாடு செய்து விட்டீர்களாக்கும் என்று நான் வந்தால்......"

"அதற்கும்தான் ஒருவரிடம் தக்கபடி ஏற்பாடு செய்துவிட்டேன்......"

"என்ன, பணத்திற்கா?"

வாத்தியாருக்குத் தம்மையும் அறியா மல் சிரிப்பு வந்தது. "ஆமாம்; அப்படித் தான் வைத்துக் கொள்ளேன்!" என்றார்.

"எவ்வளவு?"

"மாதம் பத்து ரூபாய்!"

"என்ன பிதற்றுகிறீர்? மாதம் பத்து ரூபாய் வாங்கி அக்ஷராப்பியாசம் எப் படிச் செய்வதாம்?"

"அக்ஷராப்பியாசம் என்னடி, அக்ஷ ராப்பியாசம்! அதைப்பற்றியே எப் பொழுது பார்த்தாலும் பிரமாதமாகப் பேசிக் கொண்டிருக்கிறாயே? — இப் பொழுது பார்த்துக் கொண்டே யிரு. நான் அவனுக்கு அக்ஷராப்பியாசம் செய்து வைக்கப் போவதை! — அடேய், சந்தர்! அடேய், சந்தர்!"

"என்ன, அப்பா!"

"கோடி வீட்டுக் கோமளவர ஐயரை உனக்குத் தெரியுமோ, இல்லையோ?"

"தெரியும்."

"நாளைய தினத்திலிருந்து நீ அவரு டன் போக வேண்டும்."

"எதற்கு, அப்பா?"

"என்னுடைய கஷ்டத்தில் நீயும் கொஞ்சம் பங்கெடுத்துக் கொள்வதற் காகத்தான்!"



"சரி, ஆக்ஷேபிக்கிறவர்களைப் பத்தி இப்போழுது தெரிந்துவிட்டது; ஆக்ஷேபிக்காதவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் தயவு செய்து கையைத் தூக்கட்டும்!"

"இதென்ன அப்பா, இது! எனக்கு ஒன்றும் புரியவில்லையே?"

"நான் சொல்வதைக் கேள். எல்லாம் தானே புரிந்து விடும். நாளையிலிருந்து நீ அவருடன் போ! அவர், தம்முடைய ஆபீஸில் உனக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுப்பார். அதன்படி, நீ மானேஜர் மேஜையின் மேலிருக்கும் மணி 'டங்' என்று ஒலித்ததும், அவருக்கு முன்னால் போய் பயபக்தியுடன் நின்று, "ஏன்?" என்று கேட்க வேண்டும்; அவர் வருவதற்கு முன்னால் அவருடைய மேஜை, நாற்காலி முதலியவற்றைத் துடைத்து வைக்க வேண்டும்; காலையில் சென்றதும் முதல் வேலையாகக் குப்பைக் கூடையைக் காலி செய்து அவருடைய மேஜைக்குக் கீழே வைத்து விடவேண்டும். இப்படியெல்லாம் செய்தால் மாதம் பத்து ரூபாய் உனக்குச் சம்பளமாகக் கிடைக்கும். என்னுடைய கஷ்டமும் கொஞ்சம் குறையும். என்ன, செய்கிறாயா? — என்னமோ, அப்பா! என்னால் உனக்குச் செய்துவைக்க முடிந்த அக்ஷராப்பியாசம் இதுதான்!" என்ற கடைசி வரியைச் சொல்லும் போது மட்டும் அவருடைய கண்களில் ஏனோ நீர் துளித்தது.

மங்களத்திற்கோ ஆத்திரம் தாங்கவில்லை. அவள், "உங்கள் அக்ஷராப்பியாசமும் நீங்களும் நாசமாய்ப் போங்கள்!" என்று சபித்துவிட்டு, ஜயசந்திரனை இழுத்துக் கொண்டு அப்பால் சென்று விட்டாள்.

பேதை!—ஒரு ஏழை வாத்தியார் தம்முடைய பிள்ளைக்கு அதைவிட வேறு எந்த விதத்தில் 'அக்ஷராப்பியாசம்' செய்து வைக்க முடியும் என்பதை அவள் அறிவாளா?

படித்துப் பார்!

அதிசயம் இல்லை!

சீதாராமச் செட்டியாருடைய மளிகைக் கடையில் வேலை பார்க்கும் சின்னசாமி தன்னுடைய முதுகெல்லாம் நோவும்படியாக நாள் முழுதும் மூட்டை சுமப்பான். செட்டியார் மூட்டைக்குக் காலணா வீதம் கூலி கொடுப்பார். ஆனால், என்றாவது ஒருநாள் சின்னசாமி அறுபத்துநான்கு மூட்டைகளுக்கு மேலே தூக்கி அடுக்கிவிட்டு, ஒரு ரூபாய்க்கு மேல் கூலி வாங்க வந்துவிட்டால் செட்டியாருக்குக் கண்ணீர் வந்து விடுமாம். இந்த துக்க நிவர்த்திக்காக, திருப்பதி தேவஸ்தானத்தின் தர்ம உண்டிக்கென்று அந்த ஒரு ரூபாயிலிருந்து இரண்டணாவைப் பலவந்தமாக எடுத்துக் கொள்வாராம்!

இதை வாசித்ததும், மேற்படி செட்டியார் எங்கே இருக்கிறார்; அவருடைய மளிகைக் கடை எங்கே இருக்கிறது என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள நமக்கு அளவு கடந்த ஆத்திரமும் கோபமும் உண்டாகிறது அல்லவா? மேற்படி செட்டியார் ஒருவர் மாத்திரம் அல்ல; அவரைப்போல சமூகத்திற்கே பெரும் இடையூறாக இருந்து ஏழை மக்களுக்குச் சொல்லவொண்ணாத கஷ்டங்களையெல்லாம் விளைவித்து உலகத்திலே வறுமையைச் சகஜமாக நிலைநிறுத்துவதற்கு உதவி பண்ணும் மகாநுபாவர்கள் அத்தனை பேரையும் பார்க்க வேண்டுமானால், அவர்களுடைய மூஞ்சி—முகம் எல்லாம் எப்படி யிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், 'விந்தன்' எழுதியிருக்கும் முல்லைக் கொடியாள் என்ற நூலை வாங்கி வாசித்துப் பாருங்கள்.

மொத்தம் இருபத்தைந்து கதைகள் கொண்ட இந்தக் கதைத் தொகுதியின் ஒரு தனிச் சிறப்பு என்னவென்றால், இதில் ஒன்றிரண்டைத் தவிர மற்ற எல்லாக் கதைகளுமே தொழிலாளர்களின் வாழ்க்கையைப் பற்றியதாகும். கொஞ்சங்கூடக் கூடுதல் குறைச்சல் இல்லாமல் தொழிலாளர்களுடைய வாழ்க்கையை உள்ளது உள்ளது போலவும் உண்மையாகவும் எடுத்துக் கூறி நம்முடைய மனதிலே அளவு கடந்த உருக்கத்தை உண்டாக்குகின்றன இந்தக் கதைகள்.

தொழிலாளர்களைப் பற்றிக் கதை எழுதுவதென்றால் அது சுலபமான காரியம் அல்ல. இதைப் பற்றி, இந்த நூலுக்கு முகவுரை எழுதியிருக்கும் "கல்கி" ஆசிரியர் சொல்லியிருப்பதைப் பாருங்கள்:

"பாடுபட்டு அறியாதவன் பாட்டாளியின் துயரத்தைப் பற்றியும், சேற்றில் இறங்கி அறியாதவன் குடியானவனுடைய கஷ்டத்தைப் பற்றியும் என்னதான் கண்ணீரில் பேனாவைத் தோய்த்துக் கொண்டு எழுதினாலும் அந்தக் கதைகளில் மற்ற எல்லாச் சிறுகதை இலட்சணங்களும் இருக்கலாம்; உள்ளத்தை ஊடுருவித் தைக்கும்படியான இதயம் ஒன்றிய ஈடுபாடு இருப்பதில்லை."

அப்படியிருக்கும்போது, விந்தன் இந்நூலில் தொழிலாளர்களைப் பற்றியும் இவ்வளவு நுட்பமாகவும் அழகாகவும் உள்ளத்தை ஊடுருவும்படியும் எப்படி எழுத முடிந்தது?

இதற்குக் காரணம் என்னவென்றால், இந்த நூலாசிரியராகிய விந்தன் மேற்படி தொழிலாள மக்களிடையே பிறந்து வளர்ந்து உழைத்தும் பண்பட்டவர். அத்தகையவர் எழுதும் கதைகளிலே மேற்படி இதயம் ஒன்றிய ஈடுபாடு இருப்பதிலே அதிசயம் ஒன்றும் இல்லையல்லவா?

ஏழை எளிய மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் இந்த அருமையான கதைத் தொகுதிக்குத் தமிழ்நாடு நல்ல வரவேற்பளிக்கும் என்று கருதுகிறோம்.

முல்லைக் கொடியாள் — ஆசிரியர்: விந்தன்; பிரசுரம்: ஸ்டார் பிரசுரம், பாலக்கரை, திருச்சி; விற்பனையாளர்கள்: தமிழ்ப் புத்தகாலயம், மயிலை, சென்னை; விலை ரூ. 3—0—0.



சமாதானகாலத்திலும்

ஆறு வருஷ கடுமையான யுத்த காலத்தைக்கடந்து விட்டோம். மூச்சுவிட நேரமின்றி முழு வேலை செய்த வருஷங்கள். ஈவிரக்கமின்றி உயிர், பொருள் நாசமடைந்த நாட்கள். அப்பாடா! எத்தகைய மன ஆறுதலுடன் களைப்புற்ற உலகம் சமாதானத்தை நிலைநிறுத்தி, புனர் நிர்மாண வேலைகளைத் தொடங்குகிறது. இதுவும் சிரமமான வேலைதான். இப்பொழுதுதான் நமது நன்மைக்கு பாடுபடுகிறோம்; படும் சிரமத்துக்கும் தக்க பலனுண்டு.



யுத்தகாலத்திலும்




போர் வீரர்களுக்கு ஊக்கமளித்து வந்த டீ, சமாதான நாட்களிலும் தன் சேவையைச் செய்ய பின்வாங்காது. டீயை நம்புங்கள்; உற்ற சமயத்தில் உதவும் நண்பன் அது; களைப்புற்று கவலையுடன் ஊக்கமிழந்து சோர்வுற்றிருக்கும் வேளையில் டீயைப் போன்ற சோர்வகற்றும் பானம் வேறெதுவுமில்லை. மனித சமூகத்தின் முன்னேற்றத்துக்கு பாடுபடும் உங்களுக்கும் தன் உதவியைச் செய்ய பின்வாங்காது.

டீயை நம்புங்கள்



இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.





உள்ளும் புறமும்

என். என்.

அந்தக் கடிதத்தை ஆத்மராமய்யர் படித்துக் கொண்டிருக்கையில், அவர் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களைக் கண் கொட்டாது கவனித்துக்கொண்டு நின்றாள் அகிலாண்டம்.

கடிதத்தைப் படித்து முடித்த ஆத்மராமய்யர் தன்னையுமறியாது பெருமூச்சு விட்டார். அவர் முகத்தில் விவரிக்க வொண்ணாத சோகத்தின் சாயல் படிந்திருந்தது.

"அப்பா! என்ன எழுதியிருக்கிறார்கள்?......" என்று தன் ஆவலை அடக்க முடியாமல் கேட்டாள் அகிலாண்டம்.

ஆத்மராமய்யர் உடனே பதிலளிக்கவில்லை. மிதமிஞ்சிய ஏமாற்றமும் துக்கமும் அவர் தொண்டையை அடைத்து விட்டன. மிகுந்த சிரமத்துடன் சொன்னார்:

"பையனுடைய அப்பா எழுதியிருக்கிறார்...... உன் சங்கீதத்தைக் கேட்டுப் பையன் மிகவும் சந்தோஷப் பட்டானாம். ஆனால்...... நீ மிகவும் கறுப்பாயிருப்பதால், மனசுக்குப் பிடிக்கவில்லையாம்...... 'மன்னிக்க வேண்டும்' என்று முடித்திருக்கிறார்."

"இதை நேரிலேயே சொல்லிவிட்டுப் போவதுதானே? 'ஊருக்குப் போய் எழுதுகிறேன்' என்று சொன்னதின் அர்த்தம் இதுதானா?...... ஹூம்...... பிள்ளையாண்டான் அழகாய், லட்சணமாய் இருக்கிறானே, நமக்கு மாப்பிள்ளையாக வந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?' என்று பகவானை வேண்டிக் கொண்டேனே!...... 'பெண் கறுப்பு, அதனால் வேண்டாம்' என்று சொல்லி விட்டானா?..." என்று சோகமும் கோபமும் கலந்த குரலில் கூறினாள் அன்னபூரணியம்மாள்.

"ஹூம்... நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்...... அகிலத்தை மணப்பதற்கு எவன், எங்கே காத்திருக்கிறான் என்பதை நாம் கண்டோமா, என்ன?" என்று சமாதானம் கூறிக் கொண்டார் ஆத்மராமய்யர்.

தன்னையும் மீறிப் பீறிட்டுக் கொண்டு வந்த துக்கத்தை அடக்கிக் கொண்டு தன் அறைக்குச் சென்றாள் அகிலாண்டம்.

அவள் மனம் ஓர் நிலையிலில்லை. என்றாலும் எண்ணமெல்லாம் எண்ணிறந்த கொந்தளித்தெழும் சிந்தனைகளால் குழம்பித் தவித்தது.

2

அகிலாண்டம் பல விதங்களில் துரதிர்ஷ்டசாலி என்றே சொல்ல வேண்டும்.

ஆத்மராமய்யருக்குக் கலெக்டர் ஆபீஸில் குமாஸ்தா உத்தியோகம். மாதச் சம்பளமாகக் கிடைக்கும் எழுபது ரூபாயை வைத்துக் கொண்டு மனைவி, மூன்று பிள்ளைகள், இரண்டு பெண்கள், ஆகிய குடும்பத்தை நடத்த வேண்டிய மகத்தான பொறுப்பு அவர் தலைமீது சுமத்தப் பட்டிருந்தது. அகிலாண்டம் அவருடைய சிமந்த புத்திரி.

கடைந்தெடுக்கப்பட்ட விக்கிரகத்தை யொத்த சாமுத்திரிகா லட்சணங்களையளித்த பிரம்மன், வேண்டுமென்றோ அல்லது ஞாபகப் பிசகாகவோ, அகிலாண்டத்தின் மேனியைத் திரௌபதியின் மேனியைப் போன்று படைத்து விட்டான். காமனின் வில்லையொத்த புருவங்களையும், மீனை யொத்த கரு விழிகளையும் வெண்முத்தைப் போன்ற பற்களையும், கருநாகத்தைப் போன்ற பின்னற் சடையையும் அளித்த தெய்வம், அவள் மேனியை மாத்திரம் ஏன் கறுப்பாகப் படைக்க வேண்டும்?

அகிலாண்டத்திற்குத் தன் கணவன் செய்த வஞ்சகத்தை ஈடு செய்யும் பொருட்டுத்தானோ என்னவோ, சரஸ்வதி தேவி அவள் மீது தன் அன்புப் பார்வையைச் செலுத்தினாள். அகிலம் ஏழாவது வயதில் ஆங்கிலப் புஸ்தகத்தை வாசிக்க ஆரம்பித்ததைக் கண்ட ஆத்மராமய்யர் உண்மையில் ஆச்சரியமடைந்தார். பத்தாவது வயது முடிவதற்குள் அவள் கைதேர்ந்த வித்வானைப்போல் சங்கீதக் கச்சேரி செய்ய ஆரம்பித்த பொழுது, அவர் பிரமித்து விட்டார்! ஆம், அகிலம் அற்புதமாகத்தான் பாடினாள். அவள் சங்கீதத்தைக் கேட்டவர்களும், 'தேவகானம் என்பது இது தானோ?' என்று தங்களுக்குள்ளேயே



கேட்டுக் கொண்டனர் என்றால் அதன் தன்மையையு[ம்] உயர்வையும் பற்றி மேலும் கூற வேண்டுமா?

கன்னிப் பருவத்தை யடைந்திருந்த தன் புதல்விக்கு தகுந்த வரனைத் தேட ஆரம்பித்தார் ஆத்மராமய்யர். கட[ன்] வாங்கியாவது அவள் கல்யாணத்தை எப்படியாவது முடித்[து] விட வேண்டும் என்று தீர்மானித்து விட்டார். "குதி[ரை] மாதிரிப் பெண்ணை வளர்த்து வீட்டிற்குள்ளேயே வைத்து[க்] கொண்டிருக்கிறான், பார்!" என்று உலகம் அன்னபூர[ணி]யம்மாளைப் பார்த்துச் சிரித்துப் பேசிக் கொள்ள ஆர[ம்]பித்து விட்டதே! அதன் வாயை மூடவாவது கல்யாண[ம்] செய்தாக வேண்டுமே!

போகாத இடங்களுக் கெல்லாம் போனார்; தேடா[த] இடங்களிலெல்லாம் தேடினார். கண்டவர்களை யெல்லா[ம்] விசாரித்தார்; கையிலகப்பட்ட ஜாதகங்களைக் கொண்[டு] வந்து, ஜோசியர்களைக் கலந்து ஆலோசித்தார்.

ஜாதகங்கள் பொருந்தி யிருந்த இடங்களுக்குச் சென்று பிள்ளை வீட்டுக்காரர்களைப் பேட்டி கண்டார்.

பிள்ளைகள் ஒவ்வொருவராக வந்து பெண்ணைப் பார்[த்]தனர்; பார்த்து விட்டுச் சென்றனர்.

ஒருவரிடமிருந்தாவது 'சம்மதம்' என்ற சொல் கிடைக்[க]வில்லை. சிலர் நேரிடையாகப் 'பெண் கறுப்பு; வேண்டாம்' என்றனர். மற்றும் சிலர் சற்று நாகரீகமாக, 'பின்[...] அவ்வளவாகச் ச[ம்]மதப்படவில்லை' என்று எழுதினர்.

ஆத்மராமய்யர் மன[த்]தைத் தளர விடாம[ல்] மேலும் ஜாதக[ங்]களைச் சேகரித்து[க்] கொண்டிரு[ந்]தார். கடைசியா[க] ஒரு ஜாதகம் வந்தது. அது அகிலத்தி[ன்] ஜாதகத்துடன் வெகு நன்றாகப் பொருந்தி யிருந்தது.

ராகவன் என்[ற] பெயரை யுடைய அந்த வாலிபன் தன் வீட்டிற்குள் நுழையும்பொழுது, கதவ[ின்] அன்ன சாவித் துவா[ர]த்தின் மூலம் அவ[ன]னைப் பார்த்த அகிலம் தன்னையு மறியாமல் அவனிடம் தன் மனத்தைப் பறி கொடுத்து விட்டாள். அவன் பார்ப்பதற்கு லட்[ச]ணமாகத்தா னிருந்தான். அகன்ற முன்னெ[ற்றி] வில்லாக வளைந்த [...] போன்றிருந்த அவன் தோற்றம் அகிலத்தின் கண்களைக் கவர்ந்தது.

அவன் உதடுகளில் லேசாகத் தவழ்ந்து கொண்டிருந்த புன்னகை அவள் உள்ளத்தையே கொள்ளை கொண்டு விட்டது.

அன்று அவன் பாடிய மாதிரி அது வரை என்றுமே பாடியதில்லை. தன்னையும் மறந்து பாவத்தைப் பொழிந்து கொண்டிருந்தான். வீணையின் தந்திகளுக்குப் பதிலாக அவன் தன் ஹிருதயத் தந்திகளையே மீட்டிப் பாடுவது போன்றிருந்தது.

சங்கீதத்தைக் கேட்டுவிட்டு எழுந்த ராகவன், "ஊருக்குப் போய் எழுதுகிறேன்!" என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டான்.

ஒவ்வொரு நாளும் ராகவனிடமிருந்து பதிலை எதிர்பார்த்த வண்ணம் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தாள் அகிலம். அவள் மனம் பட்ட பாடு அந்த ஈசுவரனுக்குத்தான் தெரியும். "ஐயோ, அவரும் ஒரு வேளை, எல்லோரையும் போல் நான் கறுப்பாயிருப்பதால் தனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லி விடுவாரோ? ......" என்று நினைக்கும் பொழுதே அவள் ஹிருதயம் வெடித்து விடும் போலிருந்தது. "ஈசா, என் உள்ளக் கோயிலில் குடி கொண்டுள்ள அவரையும் என்னையும் பிரித்து விடுவாயோ?" என்று அவள் உருகிய வண்ணமிருந்தாள்.


ராகவன் பார்த்து விட்டுச் சென்று ஒரு வாரம் கழித்து அவன் தந்தையிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. ஆரம்பத்தில் கூறப்பட்ட கடிதமே அது.

3

அன்றிரவு படுக்கையில் சாய்ந்த அகிலத்திற்குத் தூக்கமே பிடிக்கவில்லை. அவள் உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது. "என் உடல் கறுப்புத்தான்; ஆனால்.. என் உள்ளம் கறுப்பல்லவே! ...... தெய்வமே, அவருக்கு ஏன் இது தெரியவில்லை? ......மேனி அழகைக் கண்டு மதி மயங்கும் மூடவர்க்கத்தைச் சேர்ந்தவர் தானா அவரும்? ...... வெளி வேஷத்தைக் கண்டு வியந்துருகும் வீணர்களின் கோஷ்டியைச் சேர்ந்தவர் தானா அவரும்? ......"

திடீரென்று அவள் மனத்தில் ஒரு திட வைராக்கியம் தோன்றியது. சந்தடியின்றி எழுந்து சென்று ஒரு காகிதத்தை எடுத்தாள். விளக்கை ஏற்றி வைத்துக்கொண்டு எழுதத் தொடங்கினாள்:

"அன்புமிக்க தாய் தந்தையருக்கு, அநேக கோடி நமஸ்காரங்கள். நான் உங்களுக்குப் பெரும் பாரமாகத்தான் இருந்து வந்திருக்கிறேன் என்பதில் சந்தேகமில்லை. எனது கறுப்பைக் கண்டு யாவரும் வெறுப்பதில் ஆச்சரியமில்லை. உலகத்தில் சகஜமானதுதான். நான் இனியும் உங்களுக்குப் பாரமாக இருக்க விரும்பவில்லை ...... நான் உங்களை விட்டு உங்கள் உத்தரவின்றிப் பிரிய நேரிட்டதைப் பற்றி வருந்துகிறேன். ஆயினும், அதைத் தவிர வேறு சிறந்த வழி இருப்பதாகத் தோன்றவில்லை. அப்பா, அம்மா! நீங்கள் என்னைப் பற்றிக் கொஞ்சங்கூடக் கவலைப்பட வேண்டாம். நான் தற்கொலை செய்து கொள்ளமாட்டேன் என்பதை நிச்சயமாக நம்புங்கள் ...... என்றைக்-



காவது மறுபடியும் உங்களை வந்தடைவேன்......என்று, எப்பொழுது என்பது எனக்கே தெரியாது. குழந்தைகளை விட்டுப் பிரியவேண்டி யிருப்பதும் எனது துரதிர்ஷ்டந்தான். அவர்களுக்கு என் ஆசிகளைத் தெரிவியுங்கள்...நான் போய் வருகிறேன் .... நமஸ்காரம்.

தங்கள் அன்புள்ள,

அகிலம்."

கடிதத்தை மடித்துத் தன் தந்தையின் தலையணைக் கருகில் வைத்துவிட்டுத் திரும்பினாள். தன் அறையிலிருந்த சில புடைவைகளையும் மற்றும் அவசியமான துணிமணிகளையும் ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டு சந்தடியின்றி புறப்பட்டாள். 'க்ரீச்' சென்ற சப்தத்துடன் வாசற்கதவு திறந்ததும் ஒரு வினாடி திடுக்கிட்டு நின்று விட்டாள். நல்லவேளையாக ஒருவரும் விழித்துக் கொள்ளவில்லை.

ரயில்வே ஸ்டேஷனில் டிக்கட் கொடுக்கும் குமாஸ்தா அவள் கொடுத்த ஐந்து ரூபாய் நோட்டை வாங்கிக் கொண்டு, "எந்த ஊர்?" என்று கேட்ட பிறகு தான் அவளுக்குத் தான் போகவேண்டிய இடத்தைப் பற்றிய சிந்தனை தோன்றியது!

ஒரு நிமிஷம் வெகு தீவிரமாக யோசித்தாள். அவளுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுத்த ருக்மணி அம்மாள் தற்சமயம் சென்னையில் வசித்து வந்தது அவளுக்கு ஞாபகம் வந்தது. அவள் வீட்டிற்குச் சென்றால், ஏதாவது பிரயோசனம் ஏற்படும் என்று தோன்றியது. அவள் மனத்தில் ஒருவித நிம்மதி ஏற்பட்டது.

"சென்னை" என்றாள், டிக்கட் கொடுக்கும் குமாஸ்தாவிடம் கன்னத்தில் அறைந்தாற்போல். அவன் ஒரு டிக்கட்டை மறு வினாடியே வெளியே போட்டான். அதைத் தொடர்ந்தாற்போல் சில நாணயங்களும் வந்து விழுந்தன. அவைகளைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

வெகு நேரம் சென்றபின், ஆடி அசைந்து கொண்டு ஒரு ரயில் வந்தது. அதில் ஏறி உட்கார்ந்துகொண்டு அகிலம் கண்களை மூடிக்கொண்டாள். ரயில் சென்னையை அடைந்து சிறிது நேரங் கழித்துத்தான் அவள் நித்திரை கலைந்தது. பரக்கப் பரக்க ரயிலிலிருந்து இறங்கி வெளியே வந்தாள். ஒரு ரிக்ஷாக்காரன் அவளை வெகு குதூகலத்துடன் வரவேற்றான். அவனிடம் சிந்தாதிரிப் பேட்டையிலுள்ள ஒரு விலாசத்தைச் சொல்லி ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

காலச்சக்கரத்தின் சுழலில் இரண்டு வருஷங்கள் ஓடி விட்டன. கடந்த இரண்டு வருஷங்களில்தான் எவ்வளவு மாறுதல்கள், உயர்வு தாழ்வுகள், இன்ப துன்பங்கள் நேர்ந்திருக்கின்றன!

இரண்டு வருஷங்களுக்கு முன்பு, இந்த உலகம் ஷோபனாவைப் பற்றிக் கேள்விப் பட்டாவது இருக்குமா? கிடையாது! ஆனால் இப்பொழுதோ, கேட்பானேன்! எழுதப் படிக்கத் தெரியாத குழந்தைகளுக்கூடத் தெரியுமே—ஷோபனா, சங்கீத சரஸ்வதி, கான கலாவதி, நாடக ராணி, திரைப்பட உலக ஜோதி என்பதெல்லாம். ஆம், அவள் நடித்த படங்களுக்கு அலாதியான மதிப்புத்தான். அவள் நடிக்கும் நாடகமென்றால் வெகு தூரத்திலிருந்து ஜனங்கள் பார்த்து மகிழ வருவார்கள். அவள் பாடியுள்ள இசைத்தட்டுகள் ஆயிரக் கணக்கில் வியாபாரமாகின என்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஷோபனா புன்னகை புரிந்தால் அதற்கு ஆயிரம் ரூபாய் தருவதற்கு எவ்வளவோ பட முதலாளிகள் போட்டி போட்டனர் என்றால் சிலர் அதை நம்ப மறுக்கலாம்; ஆயினும் அது உண்மையே. ஷோபனா ஒரு சிறிய, அழகிய பங்களாவில் வசித்து வந்தாள். செல்வத்தால் விலைக்கு வாங்கக்கூடிய சுக போகங்கள் அனைத்தும் அதில் நிறைந்திருந்தன. அவள் குடும்பத்தார் அந்தப் பங்களாவை யொட்டிப் பின்னால் இருந்த இன்னொரு வீட்டில் வசித்து வந்தனர்.

ஷோபனாவைப் பேட்டி காண வரும் ஆசாமிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வந்தது. கூடுமான வரையில் அவள் வந்தவர்களை அலட்சியம் செய்யாமல் பேட்டி அளித்து வந்தாள்.

அன்று காலை பத்து மணி இருக்கும். ஸ்டூடியோவுக்கு ஒத்திகை நிமித்தம் புறப்படுவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள் ஷோபனா. சேவகன் ஒரு 'விஸிட்டிங் கார்'டைக் கொண்டு வந்து கொடுத்தான்.

'ராகவன், எம். ஏ.' என்று அந்தக் கார்டில் கண்டிருந்தது.

"சரி, கீழே ஹாலில் உட்காரச் சொல்: வருகிறேன்" என்றாள் ஷோபனா.

ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு, அன்ன நடையுடன் தோன்றிய ஷோபனாவைக் கண்டு, வந்த ஆசாமி எழுந்து கைகூப்பி வணங்கி, ஒரு அசட்டுச் சிரிப்புடன், "நமஸ்காரம்" என்றான். ஷோபனாவும் பதிலுக்கு வணங்கிவிட்டு, அவனை உட்

காரச் சொல்லித் தானும் உட்கார்ந்து கொண்டான்.

மிகுந்த பிரயாசையுடன், "நான்... இங்கே...ஒரு...இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் மானேஜராக..." என்று ராகவன் ஆரம்பிப்பதற்குள் ஸோபனா, "எனக்கு 'இன்ஷ்யூர்' செய்து கொள்வதில் நம்பிக்கையில்லை. வேறு ஏதாவது விசேஷம் உண்டா?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

"மன்னிக்க வேண்டும். நான் தங்களிடம் என் தொழில் முறையில் வரவில்லை: தங்களைத் தரிசித்து விட்டுச் செல்லவே வந்தேன்......"

ஸோபனா சிரித்தாள். அதில் ஏளனம் கலந்திருந்தது. "என்னை ஏதோ தெய்வமாகவல்லவா மதித்துப் பேசுகிறீர்கள்? .....வேடிக்கையாகத்தானிருக்கிறது!..." என்றாள்.

"வேடிக்கையென்ன?...உண்மையாகத்தான் சொல்கிறேன். இரவிலும், பகலிலும், கலவிலும், கனவிலும் உங்களையன்றி வேறு சிந்தனையின்றி உருகித் தவிக்கும் ஆத்மாக்கள் எவ்வளவு பேர் என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள்!...உங்கள் மோகனச் சிரிப்பை எதிர்பார்த்தும், உங்கள் கடைக்கண் பார்வையை எதிர்பார்த்தும், எவ்வளவு பேர் தவங்கிடக்கிறார்கள், தெரியுமா...?"

"நீங்கள்கூட அப்படித்தானோ, என்ன?..."

"சந்தேகமென்ன?...முதன் முதலாக உங்களை 'வனரோஜா' என்ற படத்தில் பார்த்த நாளிலிருந்தே உங்களை நேரில் தரிசிக்கும் பாக்கியம் கிட்டுமா என்று ஏங்கிக்கொண்டிருந்தேன். இன்றுதான் என் ஜன்மம் சாபல்யமடைந்தது..."

"உங்களுக்கு என் சமூகப் படங்கள் பிடிக்கின்றனவா, அல்லது புராணப் படங்கள் பிடிக்கின்றனவா?"

"என்னைப் பொறுத்த மட்டில், நீங்கள் எந்தப் படத்தில் நடித்தாலும் அற்புதமாய்த்தானிருக்கிறது!"

"அடுத்த படத்தில் நான் ஒரு ஏழைப் பிராமணப் பெண்ணாக நடிக்கப் போகிறேன். அழகில்லாமல், கறுப்பாகத்தான் தோன்றப் போகிறேன்......"

"திரையில் கறுப்பும் வெளுப்பும் தெரியாதே! மேலும் நீங்கள் எவ்வளவு ஏழையாகக் காண்பித்துக் கொண்டாலும், உங்கள் வனப்பும், வசீகரமும், கவர்ச்சியும் குறைந்துவிடுமா, என்ன?"

"எனக்கு என்னவோ சந்தேகமாய்த்தானிருக்கிறது. வேண்டுமென்றால் இதோ பாருங்கள்: என் முகத்திலுள்ள பௌடர், தலையிலுள்ள செயற்கைக் கூந்தல், தேகத்திலுள்ள நகைகள் முதலியவற்றை அகற்றிவிட்டு, ஒரு பழைய புடவையை உடுத்திக்கொண்டு வருகிறேன்! — அப்புறம் சொல்லுங்கள்...!" என்று சொல்லி விட்டு, ஸோபனா உள்ளே சென்றாள்.

இரண்டு நிமிஷங்களுக்குள் திரும்பி வந்த உருவத்தைக் கண்ட ராகவன், "அகிலம்! நீயா? ஸோபனா எங்கே?" என்று குழறியவாறு கேட்டான்.

"ஆம்!...நான்தான் மிஸ் ஸோபனா! ஏழை அகிலமாக இருந்தபொழுது, உங்கள் திருஷ்டியில் விகாரமாகத் தோன்றியவள், இன்று வெளி அலங்காரத்துடன், மிஸ் ஸோபனாவாகக் காட்சியளித்தால் தெய்வமாகத் தோன்றுகிறேனல்லவா? — ஏன் தலை குனிந்து கொள்கிறீர்கள்? வெட்கமாயிருக்கிறதா?" என்று ஸோபனா உத்வேகத்துடன் கூறினாள். அவள் பேச்சில் ஏளனமும் ஆங்காரமும் தொனித்தன.

ராகவன் ஏதோ பேச எண்ணினான். அவன் நா எழ மறுத்தது. பிரமை பிடித்தவன்போல் மௌனமாக அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

பிடித்து விட்டார்!



சிப்பாய் :—சண்டையிலே சேர்ந்த இருபத்து நாலு மணி நேரத்துக்குள்ளே இரண்டு ஜப்பானியர்களைப் பிடித்தேன் : அதற்கப்புறம் இரண்டு நாளிலே ஒரு ஜப்பானிய சைன்னியமே என்னிடம் பிடிபட்டுப் போச்சு!

மற்றவர் :—அப்படியா! உங்களுக்குச் சைன்னியத்திலே என்ன உத்தியோகமோ?

சிப்பாய்:—போட்டோகிராப்பர் வேலை!

வட்ட மேஜை

ஜாலஹு
28—8—46

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு

இதுவரையில் பல இலாகாக்களிலுள்ள ஏழைக் குமாஸ்தாக்களின் கஷ்டங்களைக் கூறும் தங்கள் பத்திரிகையின் மூலம் அறிந்தேன். அதே மாதிரி எங்கள் 'மிலிடெரி அக்கௌண்ட்ஸ் டிபார்ட் மெண்'டிலுள்ள குமாஸ்தாக்களின் கதறலை எல்லோருக்கும் தெரியப்படுத்த வேண்டுகிறேன்.

வேண்டும் சமயத்தில் சர்க்கார் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் குமாஸ்தாக்களைத் திரட்டி, இரண்டு குமாஸ்தாக்கள் செய்யும் வேலையை ஒரு குமாஸ்தாவிடம் கொடுத்து வேலை வாங்கினார்கள். அந்தக் குமாஸ்தாக்கள் வேலையைத் தங்கள் வீட்டிற்குக் கொண்டு சென்று இரவு பகலாய்ச் செய்து கொண்டு வந்தார்கள். அப்பொழுது சர்க்கார் அக் குமாஸ்தாவின் முதுகில் ஒரு தட்டுத் தட்டி, "நீதான் கெட்டிக்காரன். உன் மாதிரி ஆட்கள்தான் இங்கு தேவை. உனக்கு நிச்சயம் 'கன்பர்மேஷன்' கிடைக்கும்......" என்று புகழ்ந்தனர். அன்று ஏழை குமாஸ்தாக்களின் இரத்தத்தையும் அடியோடு உறிஞ்சிக் குடித்த அந்த சர்க்கார் இன்று "நீ வீட்டிற்குப் போகவேண்டியதுதான். இங்கு வேலை மிகவும் குறைந்துவிட்டது. உங்களால் இனி ஒருவித பயனுமில்லை" என்று சொன்னால் இது நியாயமாகுமா?

இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் இந்த டிபார்ட்மெண்டிலுள்ள 40,000 குமாஸ்தாக்களில், முப்பதினாயிரம் அல்லது 35000 குமாஸ்தாக்களை வீட்டிற்கு அனுப்பப் போகிறார்கள் என்றும். அந்த ஏழைக் குமாஸ்தாக்கள் என்ன செய்வார்கள்? அவர்களுடைய பிற்கால வாழ்வு என்னவாகும்?

நாங்கள் 1946-ம் வருஷத்துக் குமாஸ்தாக்கள் என்பதை சர்க்கார் உணரட்டும். வேலை நிறுத்தத்தைத் துணிந்து ஆகஸ்ட் 15-ந் தேதியிலிருந்து ஆரம்பித்து விட்டோம். எங்களுடன் சேர்ந்து கல்கத்தா, பெஷாவர், ராவல்பிண்டி, ஜபல்பூர், ஜெம்ஷெட்பூர், தேவலாலி, அவுரங்காபாத், மீரட் ஆகிய பல இடங்களிலும் வேலை நிறுத்தம் ஆரம்பமாகி விட்டது.

எங்களுடைய இந்த சாத்விகப் போராட்டத்தைக் கலைக்க சர்க்கார் பலவித முயற்சிகளைக் கையாண்டனர். முதலாவதாக எங்களுக்கு 'ரேஷன்' கொடுப்பதை நிறுத்தி விட்டது. எங்களுடைய வாயில் மண்ணைப் போட்டு விட்டால் நாங்கள் பணிந்து விடுவோம் என்று சர்க்கார் எண்ணியிருந்தால் அதை உடனே வாபஸ் பெற்றுக் கொள்ளட்டும். பட்டினி கிடந்தாவது எங்களுடைய வேண்டுகோள்களை ஒப்புக் கொள்ளச் செய்வோம். எங்களுடைய முயற்சியைக் குலைக்க இன்னும் சர்க்கார் எவ்வித முயற்சி எடுத்தாலும் அதற்கெல்லாம் பயந்தவர்கள் நாங்களில்லை.

ஓ. என். சதாசிவன்.

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு

18—8—46 தேதி கல்கி பத்திரிகையில் "அஸ்திவாரம் அசைகிறது" என்ற தலைப்பின் கீழ் நான்-கெஜட்டட் ஆபீஸர்கள் குறைகளைப் பற்றி எழுதி யிருப்பதைப் படித்தேன்.

எந்தச் சர்க்காருக்கும் ஆதாரமான அஸ்திவார உத்தியோகஸ்தர்கள் கிராமாதிகாரிகள்தான். பூர்வீகத் தமிழ் மன்னர்களால் ஏற்பட்ட பூர்வீக பாத்யதையின் பொறுப்பின்மேல் ஒரு பைசா பாக்கி யில்லாமல் அக்கறையுடன் வரி வசூலித்து அனுப்பி வருகிறோம். எந்த விதமான கஷ்டங்களுக்கும் வேலைகளுக்கும் ஈடு கொடுத்துக் கொண்டு அதிகாரிகளால் கேவலமாகவும் அலட்சியமாகவும் நடத்தப்பட்டுப் பொறுமையுடன் சகித்துக் கொண்டு வருகிறோம்.

தற்கால வாழ்க்கை நிலைமையை அனுசரித்துத் தோட்டி முதல் தொண்டமான் வரை சங்கம் கூடிக் கிளர்ச்சி செய்கிறார்கள். கிராம உத்தியோகஸ்தர்களும் கிளர்ச்சி செய்கிறார்கள். ஆனால் அதைக் கவனிப்பார் இல்லை. எங்களால் வசூலிக்கப்பட்டு வரும் தொகைகளையும் எங்கள் கணக்குகளையும் சரி பார்த்து எழுதுகிறவர்கள் அஸ்திவாரமா? அல்லது பலவித வரிகள் வசூலித்துக் கொடுப்பதுடன் சர்க்காருக்கு வேண்டிய சகலவித ரிக்கார்டுகளும் தயார் செய்து அனுப்புகிறவர்கள் அஸ்திவாரமா? பாக்கிப் பணம் கிராமத்தில் நின்றுவிட்டால் இந்த நான்-கெஜட்டட் ஆபீஸர்கள் கிராமத்தில் வந்து யாரை இன்னார் என்று தெரிந்து வசூல் பண்ண முடியும்?

இந்த ரேஷன் காலத்திலே கிராமங்களில் உள்ள ஜனத்தொகை, நிலத்தின் விஸ்தீரணம், சாகுபடி, உணவுப் பொருள்களின் அளவுகள் A. B. C. D. கணக்குகள் இவற்றை யெல்லாம் தயார் செய்வது நாங்களா? அல்லது தாலுகா குமாஸ்தாக்களா?

ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு விகிதாசாரம் பிரித்து அந்தந்த வேலையைச் செய்வதற்கு மாத்திரம்தான் அவர்களுக்குப் பொறுப்பு உண்டு. ஆனால் சர்க்கார் காரியாலயத்தில் எவ்வளவு கிளைகள் ஏற்படுத்தி யிருக்கிறார்களோ அவ்வளவு பொறுப்பையும் கிராமத்தின் இரண்டொரு நபர்கள்தான் செய்து முடிக்கிறார்கள்.

போலீஸ், மாஜிஸ்ட்ரேட், சிவில், ரெவின்யூ இன்னும் விற்பனை வரி, வருமான வரி முதலிய சர்க்காரால் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சகல இலாகாக்களுக்கும் கிராம உத்தியோகஸ்தர்கள்தான் அஸ்திவாரம்.

எங்கள் பொறுப்பை முழுதும் எழுதுவதென்றால் இடம் போதாது. எழுதுவதும் முடியாத காரியம். ஆனால் உண்மை தெரியாமல் எங்களை சர்க்காரில் உள்ள எல்லா டிபார்ட்மெண்டுக்கும் கேவலமாக மதிக்கிறார்கள். இதற்குக் காரணம் நாங்கள் எல்லாச் சிப்பந்திகளுக்கும் மிகவும் கீழ்த்தரமான சம்பளம் பெறுவதுதான். எங்களிடம் பட்டமான சம்பளம் வாங்குபவர் இல்லை என்றே கூறவேண்டும்.

மற்றவர்கள் மாதிரி ஆர்ப்பாட்டக் கிளர்ச்சிக்கு எத்தனம் செய்யாமல் நாங்கள் எங்கள் பொறுப்பை உணர்ந்து நேர்மையான முறையில் எங்கள் குறைகளைத் தெரியப்படுத்தி வருகிறோம். மேல் கட்டிடங்கள் அசைவுபட்டு அசைந்து வருவதைப்போல் அஸ்திவாரமாகிய நாங்களும் அசைய ஆரம்பித்தால்தான் மேல் கட்டிடத்தின் நிலைமை என்ன என்பது தெரியவரும். அதற்கு அவசியம் ஏற்படாமல் பொறுமையுள்ள சர்க்கார் எங்களுக்கும் வாழ்க்கை நிலைமை உயர வழி காட்டுவார்கள் என்று நம்புகிறோம்.

ஜீ. எஸ். சுப்பையா.

காலக்ஷேபம்

பாதிரியார்:—உலகம் அநித்யம்! இன்றைக் கிருப்பார் நாளைக்கு இருப்பது நிச்சயமில்லை. மானிட வாழ்வை நம்ப முடியாது.........

பக்கத்தில் இருப்பவர்:—இதைத்தான் நானும் சென்ற ஐந்து வருஷங்களாகச் சொல்லி வருகிறேன்.

பாதிரியார்:—நீங்களும் பாதிரியார்தானோ?

ப. இ:—இல்லை இல்லை; நான் ஒரு இன்ஷூரன்ஸ் ஏஜண்டு!

●

கிரகஸ்தர்:—என்ன, பத்தர்வாள்! என் பெண் கல்யாணத்திற்குப் பண்ணச் சொன்ன செயினை அந்தப் பெண்ணிற்குச் சீமந்தம் நடக்கும் இப்பொழுதாவது தரக்கூடாதா?

பத்தர் (தன் மகனிடம்):—என்னடா மடப்பயலே, இந்த மாதிரி அவசர வேலையை யெல்லாம் வாங்கிக் கொள்ளாதே என்று உனக்கு எத்தனை தடவை சொல்வது!

—டி. சௌரிராஜன்.

மனைவி (தன் கணவனைப் பார்த்து):—ஐயோ, அப்பா! நான் என்ன செய்வேன்! இன்று காலை ஒரு பாம்பைக் கண்டு பயந்து விட்டேன். ஒரே ஜுரமாய் அடிக்கிறது!

கணவன்:—அடடா, அப்போதே சொல்லியிருந்தால் ஒரு கீரிப் பிள்ளையையாவது கொண்டு வந்து காண்பித்திருப்பேனே!

—எம். வெங்கடராமன்.

●

பிள்ளை:—இன்று மோர் ரொம்ப மோசமாக இருக்கிறது!

தாயார்:—அது மோர் இல்லையடா, தயிர்!

—டி. எஸ். டி. ராஜன்.

●

மாஜிஸ்ட்ரேட் (திருடனைப் பார்த்து):—பையில் வைத்திருந்த மணிபர்ஸை நீ அவருக்குத் தெரியாமல் எப்படி எடுத்தாய்?

திருடன்:—அதெல்லாம் சொன்னா வராதுங்க; நானாவட்டத்தில் பழகவேண்டுங்க!

—எம். சுப்பிரமணியன்.

ஆகஸ்டு-ஸெப்டெம்பர்

கி. ரா.

சென்று போன ஆகஸ்ட் மாதத்தைச் "சென்றுவா!" என்று வழியனுப்புவோமாக! ஆகஸ்டைத் தொடர்ந்து வந்துள்ள ஸெப்டெம்பர் மாதத்துக்கு நல்வரவு கூறுவோமாக.

ஆகஸ்ட் மாதம் வெகு விசேஷம் வாய்ந்த மாதம். முதலாவது உலக மகா யுத்தம் 1914-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பமாயிற்று. இங்கிலாந்தும் ஜப்பானும் அந்த ஆகஸ்ட் மாதத்தில்தான் ஜெர்மனியின் மேல் போர் தொடுத்தன. இரண்டாவது மகா யுத்தம் வராமல் தடுப்பதற்கான முயற்சிகள் எல்லாம் 1939-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் நடந்தன. சமாதானப் பேச்சுகள் பலனளிக்காமல் போகவே ஹிட்லர் ஆகஸ்ட் முடிந்து ஸெப்டெம்பர் பிறந்துகொண்டிருக்கும் வேளையில்தான் போலந்தின் மேல் படையெடுத்தார். இரண்டாவது மகா யுத்தமும் தொடங்கியது.

யுத்தம் வருவதைத் தன்னால் தடுக்க முடியவில்லையே என்ற வருத்தம் ஆகஸ்ட் மாதத்துக்கு மனத்தில் பொங்கிக் குமுறிக்கொண்டு இருந்திருக்கவேண்டும். 1940 ஆகஸ்ட் 15-ம் தேதி ஹிட்லர் இங்கிலாந்துமேல் படையெடுக்க வைத்திருந்த முகூர்த்தம் தவறிப் போனதால் ஆகஸ்ட் மாதம் மற்றும் ஐந்து வருஷங்கள் காத்திருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது!

ஆகஸ்ட் மாதத்தின் மனக்குறை தீர வந்தது அணுகுண்டு. ஹிரோஷிமாவும், நாகசாகியும் தவிடுபொடியாயின. ஜப்பானிய சக்கரவர்த்தி சரணாகதி யடைந்தார். ஆறு வருஷ யுத்தம் நின்றது. அணுவின் மகத்தான சக்தியைப் பற்றி உலகம் அதிசயித்தது. ஆனால் ஆகஸ்ட் மாதம் தான் நினைத்த காரியத்தை முடித்த ஆனந்தத்தில் ஆழ்ந்தது!

ஆகஸ்ட் என்றால் நமக்கு உடனே "ஆகஸ்ட் இயக்கம்", "ஆகஸ்ட் தியாகி" "ஆகஸ்ட் துரோகி" "ஆகஸ்ட் வாதி" இவையெல்லாம் ஞாபகம் வருகின்றன. கல்கத்தாவில் இந்த ஆகஸ்ட் மாதம் நடந்த குழப்பங்களுக்கு உண்மையான காரணம் என்னவென்று என்னைக் கேட்டால் ஆகஸ்ட் மாதத்தின் பெயர் வாசிதான் என்று சொல்வேன்.

எந்தக் காரிருளிலும் மின்னலின் ஒளியை எதிர்பார்க்கலாம் அல்லவா? அமெரியின் ஆகஸ்ட் திட்டத்தை அறிந்தவர்களுக்கு அதே ஆகஸ்ட் மாதத்தில் வைஸ்ராய் வேவல், காங்கிரஸ் தலைவர்களும் மற்றும் ஜனப் பிரதிநிதிகள் பலரும் கொண்ட சர்க்காரை அமைக்கப் போகிறார் என்று வந்த செய்தி ஆச்சரியத்தை அளிக்கும். ஏது, இப்பொழுது வரவர ஆகஸ்ட் மாதமும் நல்லமாதிரியாக மாறி விட்டதுபோல் இருக்கிறதே என்று எண்ண இடமிருக்கிறது.

ஆகஸ்ட் மாதத்தின் மேற்படி சந்தோஷமான சமாசாரம் வந்துவிட்டது. ஆனால் உண்மையில் தேசிய சர்க்கார் ஏற்பட்டது ஸெப்டெம்பர் மாதத்திலேதான்.

இதோ ஆகஸ்ட் மாதம் பக்கத்தைக் காலண்டரிலிருந்து கிழித்து எறிந்து விட்டு வருகிறேன். ஆகா! இந்த ஸெப்டெம்பர் 2உ இந்தியாவின் முதலாவது சுதந்திர சர்க்கார் ஏற்படுகிறது. அதோடு இந்த ஸெப்டெம்பரில் ஐந்து கல்கி இதழ்களும் வரப் போகின்றன! பேஷ்! வாழ்க, ஸெப்டெம்பர் மாதம்!

இழந்த இன்பம்

பகீரதன்

மாலைக் காற்று வாங்குவதற்காக அன்று நான் கடற்கரைக்குப் போகவில்லை; உல்லாசமாக உலாவிவிட்டு வரலாம் என்பதற்காகவும் போகவில்லை; மன அமைதியை விரும்பித்தான் சென்றேன்.

அன்று கடல் ஒரே கொந்தளிப்பாக இருந்தது. என் மனதில் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பின் எதிரொலிதானோ என்று கடல் அலைகளைப் பார்க்காமல் சற்றுத் திரும்பி உட்கார்ந்தேன். கையில் ஒரு புத்தகத்தின் துணையோடு எனக்கு எதிரே வந்து உட்கார்ந்தான் ஒரு யுவதி. கையெழுத்து மறையும் நேரமாகியும்கூட அவள் புத்தகத்தைப் படித்துக் கொண்டே இருந்தாள்.

சிவந்திருந்த அந்திவானமும் இருண்டு விட்டது. ஜனங்களும் ஒவ்வொருவராகக் கலைந்து போய்க்கொண்டே இருந்தனர். அவளும் கிளம்பி விட்டாள்; ஆனால், புத்தகத்தை மட்டும் மறந்து வைத்துவிட்டாள்.

அந்தப் புத்தகம் "என்னை எடுத்து அவள் கையில் கொடுத்துவிடேன்!" என்று சொல்லி, என்னைப் பரிதாபமாகப் பார்ப்பது போலிருந்தது.

புத்தகத்தை எடுத்துக்கொண்டு அவளைப் பின் தொடர்ந்தேன். அவள் என்னைத் திரும்பிப் பார்ப்பதற்காகக் கனைத்துப் பார்த்தேன்; இருமிப் பார்த்தேன்;—பலனில்லை. கடைசியாக மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "புத்தகத்தை மறந்து வைத்துவிட்டு வந்துவிட்டீர்களே!" என்றேன்.

அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து, "ரொம்ப வந்தனம்" என்று சொல்லிக் கொண்டே புத்தகத்தை வாங்கிக் கொண்டாள்.

சிறிது நேரம் மௌனமாகச் சென்று கொண்டிருந்தோம். "நீங்களும் இந்த வழியாகவே வருகிறீர்களே?" என்றாள்.

"ஆமாம்; என்னுடைய வீடும் இதே தெருவில்தான் இருக்கிறது!" என்று சொல்லிவிட்டு, நான் சற்று வேகமாக அவளைக் கடந்து நடக்க முயன்றேன்.

"அப்படியானால், இதோ என்னுடைய வீடும் வந்துவிட்டது; உள்ளே வந்துவிட்டுப் போகலாமே!' என்றாள்.

இந்த அழைப்பை யார்தான் ஏற்றுக் கொள்ளாமலிருக்க முடியும்?—இருவரும் உள்ளே சென்றோம்.

"இதோ, இந்த நாற்காலியில் உட்காருங்கள், வருகிறேன்" என்று சொல்லி விட்டு அவள் சமையலறையை நோக்கிச் சென்றாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அவளும் வயது சென்ற ஒரு பெரிய அம்மாளும் சமையலறையிலிருந்து வெளியே வந்தார்கள்.

காப்பியை மேஜைமீது வைத்துவிட்டு "இவர்கள்தான் என்னுடைய தாயார்!" என்று சொல்லி, அந்தப் பெரிய அம்மாளை எனக்கு அவள் அறிமுகம் செய்து வைத்தாள்.

காப்பியைச் சாப்பிட்டுவிட்டு, "ரொம்ப சந்தோஷம், நான் வருகிறேன்!" என்று சொல்லி, அவர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு வீட்டுக்குக் கிளம்பி விட்டேன்.

★

என்னுடைய மகள் பாப்பாவுக்கு ஐந்து வயது நிரம்பிவிட்டது. தாயை இழந்து விட்ட அவள், அடிக்கடி தன் தாயை மட்டுமே நினைத்து வருந்துகிறாள். ஆனால் நானோ, தாயை இழந்த அவளுக்காக வருந்துவதுடன், என் அருமை மனைவியையும் நினைத்து வருந்துகிறேன். அத்துடன் மாற்றாந் தாயின் இன்னலும் சேர்ந்துவிடக் கூடாது என்பதோடு மட்டுமல்லாமல், என் ஹிருதயத்தில் வேறு யாருக்கும் இடம் கொடுக்கக் கூடாது என்பதற்காகவும் எத்தனையோ பேர் வற்புறுத்தியும் நான் இரண்டாவது கல்யாணம் செய்து கொள்ளவில்லை.

ஒரு நாள் என்னுடைய தாயார் என் மகளை அன்போடு அணைத்துக் கொண்டு, "இந்தப் பெண்ணைப் பள்ளிக்கூடத்தில்

சேர்ந்தாவது விளையாட்டாகப் பொழுதைப் போக்குவான்!'' என்றான்.

"வாஸ்தவந்தான்; நாளைக்கே அவளைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டு மறு காரியம் பார்க்கிறேன்" என்று சொல்லி விட்டு, அன்று நான் ஆபீஸிற்குச் சென்று விட்டேன். மறுநாள் அவளை அழைத்துக் கொண்டு பள்ளிக்கூடத்துக்குச் சென்றேன். தலைமை உபாத்தியாயினியைக் கண்டதும் எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

ஏனெனில், அவளே அன்று நான் கடற்கரையில் கண்ட மங்கை. அவள் என்னவென்று அன்புடன் என்னை வினவினாள். நான் விஷயத்தைக் கூறியதும், அவள் "அதற்கென்ன, குழந்தையை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்றாள். நான் சந்தோஷத்துடன் வீடு திரும்பினேன்.

குழந்தைகள் உலகத்திற்கு விரோதமாக என் மகள் தினசரி பள்ளிக்கூடம் போக வேண்டுமென்று பிடிவாதம் பிடிப்பாள். வீட்டிலும் சதா வாத்தியார் அம்மாளைப் பற்றித்தான் பேச்சு. ஒரு நாளாவது பள்ளிக்கூடம் விட்டதும் அவள் நேரே வீட்டிற்கு வருவதே யில்லை. தலைமை உபாத்தியாயினியின் வீட்டிற்குச் சென்று சிறிது நேரமாவது இருந்து விட்டுத்தான் வருவாள். சில நாட்களில் அவள் உபாத்தியாயினியின் வீட்டிலேயே தங்கிவிடுவதும் உண்டு.

நாளடைவில் நானும் ஆபீஸை விட்டதும் நேரே உபாத்தியாயினியின் வீட்டிற்குப் போக ஆரம்பித்தேன். என் மகள், "அம்மா! அம்மா!" என்று அன்போடு உபாத்தியாயினியின் காலைக் கட்டிக் கொண்டு சுற்றிச் சுற்றி வருவாள். அதைப் பார்க்கும்போது என்னை யறியாமலே எனக்கு ஒருவிதமான இன்பம் உண்டாகும்.

"என்ன பாப்பா! நீ அம்மாவுடனேயே இருந்து விடுகிறாயா?" என்று வேடிக்கையாகக் கேட்டால், அவள் சிறிது கூடத் தயங்காமல், "ஓ!" வென்று பளிச்சென்று பதிலளிப்பாள்.

★

அன்று ஞாயிற்றுக்கிழமை. நான், உபாத்தியாயினி, பாப்பா மூவரும் கடற்கரைக்குச் சென்றோம். எனக்கும் என் மகளுக்கும் புத்துயிர் அளித்த பூமி அல்லவா அது! சிறிது நேரம் எதைப் பற்றியெல்லாமோ பேசிக் கொண்டிருந்த பிறகு, பேச்சு வாக்கில், "நீங்கள் என் இரண்டாம் முறையாகக் கல்யாணம் செய்து கொள்ளவில்லை?" என்று கேட்டாள் உபாத்தியாயினி.


"என் பாப்பாவை உத்தேசித்துத்தான்!" என்றேன் நான்.

"பாப்பாவைப் பார்த்துக் கொள்வதற்குத்தான் நான் இருக்கிறேனே!"

"எத்தனை நாளைக்குப் பார்த்துக் கொள்வீர்கள்? உங்களுக்குக் கல்யாணமாகும் வரைதானே!" என்று நான் சிரித்துக் கொண்டே கேட்டேன்.

அவள் பதில் ஒன்றும் சொல்லவில்லை. அதற்குப் பதிலாகத் தன் கரிய விழிகளால் என்னை விழுங்கி விடுபவள் போல் பார்த்தாள். அவ்வளவுதான்; உண்மையில் அவள் என் உள்ளத்தையே விழுங்கி விட்டாள்!

இந்தச் சம்பவம் நடந்த இரண்டு வாரங்களுக்குப் பிறகு, ஒரு நாள் நான் பாப்பாவைத் தேடிக் கொண்டு பள்ளிக்கூடத்துக்குச் சென்றேன். உபாத்தியாயினியின் அருகில் உட்கார்ந்து கொண்டு என் அருமை மகள் ஏதோ எழுதிக் கொண்



டிருந்தாள். என்னைப் பார்த்ததும் "அம்மா! அப்பா வந்திருக்கார்!" என்று சொல்லிக் கொண்டே என்னருகே ஓடிவந்தாள்.

அப்போது பள்ளிக்கூடம் மூடிந்து உபாத்தியாயினி தன் வீட்டுக்குப் புறப்பட்டாள். நானும் பாப்பாவும் வழக்கம்போல் அவளுடைய வீட்டுக்குப் போனோம்.

அன்று உபாத்தியாயினியின் தாயார் என்னைக்கொஞ்சம் அதிகமாகவே உபசரித்தாள்.

அத்துடன் நான் சற்றும் எதிர்பார்க்காத வாறு ஒரு விஷயத்தைக் கூறினாள். "என்னமோ, என் மூச்சு இருக்கும்போதே உங்கள் இருவருக்கும் கல்யாணத்தைப் பண்ணிப் பார்த்துவிட வேண்டும்! சுந்தரி, யாரைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறாளோ அவரையே அவளுக்குக் கலியாணம் செய்து வைப்பது என்று நான் இத்தனை நாளும் காத்துக் கொண்டிருந்தேன். இப்போது என்னுடைய எண்ணம் நிறைவேறி விடும்போல் இருக்கிறது!" என்றாள்.

இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நானும், "அதற்கென்ன, அடுத்த மாதத்திலேயே கல்யாணத்தை நடத்திவிட்டால் போகிறது!" என்றேன்.

அன்றைய தினமே, "சுந்தரி! உனக்கு இந்த உபாத்தியாயர் வேலையே வேண்டாம். நான் ஒருவன் சம்பாதிப்பது போதாதா? போசாமல் அந்த வேலையை நீ ராஜினாமா செய்துவிடு!" என்றேன்.

"அதற்கென்ன, அடுத்த மாதத்திற்குப் பிறகு விட்டுவிட்டால் போகிறது!" என்றாள் அவள்.

★

கல்யாண நாள் நெருங்க நெருங்க என்னுடைய ஆனந்தம் அளவு கடந்தது. சுந்தரியுடன் மணிக் கணக்காகப் பேசிக் கொண்டிருப்பேன். இதனால் ஒரு மாதகாலமாக ஆபீஸுக்குக் குறிப்பிட்ட நேரத்திற்குச் செல்வதில்லை.

அன்று மாலை மூன்று மணிக்கே சுந்தரியை அழைத்துக் கொண்டு சினிமாவுக்குப் போகவேண்டும் என்று ஆபீஸை விட்டுக் கிளம்பிவிட்டேன். என்னுடைய போதாத காலம் அன்று மானேஜர் என்னைத் தேடியிருக்கிறார். தினசரி காலையில் ஆபீஸ் நேரத்துக்கு வராத கோபம் வேறு, சாயங் காலம் மூன்று மணிக்கே கிளம்பிவிட்ட ஆத்திரம் வேறு! இரண்டுமாகச் சேர்ந்து என்னை மறுநாளே ஆபீஸை விட்டுத் தூக்கி விட்டது.

"சரி, வேறு இடத்தில் நமக்கு வேலை கிடைக்கும்வரை சுந்தரி தான் இருக்கிறாளே!" என்ற தைரியத்துடன் வீடு திரும்பினேன்—என்னுடைய வீட்டுக்கல்ல; சுந்தரியின் வீட்டுக்குத்தான்!

"என்ன, இந்த நேரத்திலேயே ஆபீஸி லிருந்து திரும்பி வந்து விட்டீர்களே?" என்று கேட்டாள் சுந்தரி.

"அது சரி, நீயும் ஏன் இந்த நேரத்தில் வீட்டுக்குத் திரும்பி விட்டாய்? உனக்கு இன்று பள்ளிக்கூடம் கிடையாதா?" என்று நான் அவளைத் திருப்பிக் கேட்டேன்.

அவள் பதில் ஒன்றும் சொல்லாமல் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தாள்.

அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:—

> தங்களுடைய இல் வாழ்க்கைக்கு இடையூறாக இருக்க நாங்கள் விரும்பவில்லை. ஆகவே, தங்களுடைய ராஜினாமாவை அங்கீகரிக்கிறோம். ஆனாலும் தங்களைப் போன்ற ஒரு நல்ல உபாத்தியாயினியின் சேவையை இந்தப் பள்ளிக்கூடம் இழந்து விடுவதைப் பற்றி நாங்கள் வருந்தாமல் இருக்க முடியவில்லை!

அவ்வளவுதான்; என் தலை சுழல ஆரம்பித்துவிட்டது. "உடம்புக்கு என்ன? ஏன் இப்படி இருக்கிறீர்கள்?" என்ற சுந்தரியின் குரல் காதில் விழுவதற்குள் நான் நினைவிழந்துவிட்டேன்.

வேண்டியதுதான்!



கூலியாள்:—ஐயா, மேஸ்திரியாரே! எனக்கும் ஒரு மண்வெட்டி கொடுங்க!

மேஸ்திரி:— உனக்கு எதுக்குப்பா, மண்வெட்டி? நீதான் மண் சுமப்பவனாச்சே!

கூலியாள்:— அது சரிதானுங்க! இருந்தாலும் எனக்கும் ஒண்ணு வேணும்......ஏன்னு... ...அவங்களைப் போல நானும் நின்னு இளைப்பாறணுங்க!


..லைப்பாய் பழக்கத்தைக்கூட அவள் கற்றிருக்கிறாள்!
ஊசியால் தைக்கும் போதெல்லாம் பிரயோஜனமுள்ள ஒரு சிறு பெண்ணாவதற்கு அவள் கற்றுக்கொள்ளுகிறாள். நாள்தோறும் லைப்பாய் சோப்பை உபயோகிக்கும் பழக்கத்தை அவள் அறிந்திருக்கிறபடியால் ஆரோக்கியமுள்ள ஒரு சிறு பெண்ணாக அவள் வருவாளென்றும் தன் தாய்க்குத் தெரியும். ஆரோக்யத்திற்கும். பலத்திற்கும் கண்ணுக்குத் தெரியாத சத்துருவாகிய அழுக்கு அபாயத்திலிருந்து இப்பழக்கம் அவளைப் பாதுகாக்கிறது.
LIFEBUOY
SOAP
லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது.
அது ஒரு நல்ல பழக்கம்.
L. 61-62 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

Edited, Printed and Published by R. Krishnamurthy at The "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras


கல்கி




LKI செப்டம்பர் 15, 1946

4 அணா

Regd. No. M. 4392



பெரீஸ் டோய்!!



பெரீஸ் பிஸ்கட்ஸ்

குழந்தைகளுக்கு ஆரோக்யமான உணவு

Manufactured by PERRY & Co., USILAMPATTI, S. India

மதராஸ் டிபோ ஏஜண்ட்ஸ்: சக்தி டிரேடிங் ஏஜன்ஸி
581, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்